# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை (12-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:16


# நேற்றைய ஹர்த்தாலால் குடாநாடு ஸ்தம்பித்தது!



ஹர்த்தாலால் வெறிச்சோடியுள்ள யாழ்.மத்திய பஸ்நிலையம்.

## நகரங்கள், கிராமங்கள் வெறிச்சோடின

யாழ்ப்பாணம்,டிசெம்பர் 12

**ஹர்த்தாலால் யாழ். குடாநாட்டின் அனைத்துச் செயற்பாடுகளும் நேற்றைய தினம் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.**

**அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் வழமையான அலுவல்கள் பாதிக்கப்பட்டதுடன், வர்த்தக நிலையங்கள், சந்தைகள், தனியார் மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் வங்கிகளும் மூடப்பட்டிருந்தன.**

**நகரங்கள், கிராமங்கள் அனைத்தும் ஆள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிக் காணப்பட்டன என 'உதயன்' பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.**

கடந்த 9 ஆம் திகதி யாழ். நகரப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இருவர் காயமடைந்த சம்பவத்தைக் கண்டித்தும் இவ்வாறான அப்பட்டமான இராணுவ அத்துமீறல்களை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்குடனும் நேற்றைய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சீருடையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் பூரண வெற்றியைத் தந்துள்ளது என ஏற்பாட்டாளர் (14ஆம் பக்கம் பார்க்க)

### டிராக்டர் சில்லினுள் நசியுண்டு மரணம்

ஏ-9 கண்டி வீதியில் முறிகண்டிப் பகுதிக்கு சமீபமாக நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஓடிக் கொண்டிருந்த டிராக்டரிலிருந்து தவறி வழ்ந்த இளைஞர் ஒருவர் அந்த டிராக்டரின் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்தார்.

கிளிநொச்சி அம்பாள் நகர் சாந்தபுரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சின்னத்தம்பி (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முறிகண்டிப் பகுதியிலிருந்து கிளிநொச்சிப்பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த இந்த டிராக்டரிலிருந்து நிலைதடுமாறி திடீரென கீழே வழ்ந்த இவர் டிராக்டர் சில்லுக்குள் நசியுண்டார்.

படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் பின்னர் அங்கு மரணமானார். (எ-4)

### புலிகளின் கேள்விக்குப் பதில் சொல்ல வழியில்லை

## ஏனோ தானோ போக்கில் ஜனாதிபதி; அதனாலே நடத்திய பேச்சுக்கள் தோல்வி!

### இதுதான் அரசின் கருத்து என்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,டிசெ.12

சமாதானப் பேச்சு நடத்துவதற்கு யார் பொறுப்பு என்று விடுதலைப் புலிகள் கேட்கிறார்கள். அக்கேள்விக்கு நாம் பதில்சொல்ல வழியில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்தும் பேச்சுக்களின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏனோ தானோ போக்கையே காட்டுகிறார். எமமைப் பொறுத்தவரை ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் தோல்வியடைந்துவிட்டன என்று அரசமைப்பு விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் கூறினார்.

ஜனாதிபதி கூறுவது போல தேசியப் பாதுகாப்பு அமைச்சையோ, பாதுகாப்பு அமைச்சுக்குத் துணைபுரியும் அமைச்சையோ ஏற்க அரசு தயாராக இல்லையெனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.



நேற்றுக்காலை சர்வதேச வர்த்தக மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இவற்றைத் தெரிவித்தார்.

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு ஏற்படவேண்டும். தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே பிரதமர், ஜனாதிபதியுடன் நேரடிப் (14ஆம் பக்கம் பார்க்க)

### மணிராசகுளம் முகாமை அகற்றுவதற்கு சிஹல உறுமய ஜனாதிபதிக்குக் காலக்கெடு

கொழும்பு,டிசெ.12

புலிகளின் மணிராசகுளம் முகாமை அகற்றுதல், வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்தல், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகியவை ஒருமாத காலத்துக்குள் மேற்கொள்ளப்படவேண்டும் இன்றேல், எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி கிண்ணியா பிரதேசத்தில் சிங்கள- முஸ்லிம் மக்கள் இணைந்த ஆர்ப்பாட்ட (14ஆம் பக்கம் பார்க்க)

### சு.க.தொகுதி அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா அவசர அழைப்பு

#### ஜனாதிபதி மாளிகையில் இன்று கூட்டம்

சுதந்திரக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களையும் அவசரக் கூட்டமொன்றுக்கு கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்திருக்கிறார். இக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவித்திருக்கிறார். (14ஆம் பக்கம் பார்க்க)

### மாவை எம்.பியின் மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு,டிசெ.12

வலி-வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்காததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

வலி.வடக்கு பாதுகாப்பு வலயம் சட்டபூர்வமாகவும், வர்த்தமானி மூலமாகவும் பிரகடனம் செய்யப்படவில்லை. அந்தப்பகுதியில் மீளக்குடியமர அனுமதி மறுப்பது அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே, அங்கு மீளக் குடியமர அனுமதிக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று கோரி யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஷிராணி பண்டாரநாயக்க, எதிரிசூரியா, ஜெயசிங்க ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

கொழும்பு,டிசெ.12

2003/2004 கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிகளுக்கான 'இசற் ஸ்கோர்' புள்ளிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ளது. வெட்டுப்புள்ளி விவரம் 2 ஆம் பக்கத்தில்

இதன்படி, இம்முறை 12 ஆயிரத்து 623 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டின் உடனடித் தேவைகளை இனம் காண்பதற்கு குழு நியமனம்

#### பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.12

குடாநாட்டின் உடனடித் தேவைகளை இனங்காண்பதற்கென குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் குழு நியமனம் செய்யப்பட்டது.

குடாநாட்டின் புனர்நிர்மாணப் பணிகளை (14ஆம் பக்கம் பார்க்க)




இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

NSB இன் சேமிப்புக் கணக்குகள் ஒன்றில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பேணுவதனூடாக ரூபா.300,000/- வரையிலான இலவச ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(இதற்கான வயது எல்லை 18 முதல் 70 வரை)

NSB தேசிய சேமிப்பு வங்கி

# 2003/2004ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளிகள்
## ('Z' புள்ளித்திட்ட அடிப்படையில்)

| மாவட்டம் | மருத்துவம் | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உணவும் - போசணையும் | உயிரியல் - விஞ்ஞானம் | பிரயோகவிஞ்ஞானம் (உயிரியல் விஞ்.) | பௌதிகவியல் (MPR) | பௌதிகவியல் (EM) | பௌதிகவியல் (TM) | நில அளவையியல் | கணனி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | நில அளவை விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக விஞ்.) | முகாமைத்துவம் | தோட்ட முகாமையும் மதிப்பீடும் | வர்த்தகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 2.1551 | 2.1000 | 2.0071 | 1.5924 | 1.7167 | 1.8129 | 1.5230 | 2.1587 | 1.9759 | 2.0725 | 1.9360 | 1.9959 | 1.5300 | 1.6990 | 1.3661 | 1.8006 | 1.7644 | 1.7352 |
| கம்பஹா | 1.8592 | 1.8397 | 1.8216 | 1.3804 | 1.4270 | 1.5202 | 1.3586 | 1.8660 | 1.8104 | 1.8412 | 1.7389 | 1.7916 | 1.3402 | 1.5743 | 1.2815 | 1.7013 | 1.6849 | 1.6615 |
| களுத்துறை | 1.9157 | 1.8968 | 1.8646 | 1.4245 | 1.5816 | 1.5301 | 1.4150 | 1.9024 | 1.8559 | 1.8842 | 1.8653 | 1.8171 | 1.3751 | 1.6668 | 1.3233 | 1.6867 | 1.6829 | 1.6550 |
| மாத்தளை | 1.7544 | 1.7325 | 1.7130 | 1.2455 | 1.2689 | 1.2405 | 1.1708 | 1.7502 | 1.6770 | 1.7369 | 1.6414 | 1.7146 | 1.2345 | 1.4789 | 1.2050 | 1.5011 | 1.6814 | 1.5580 |
| கண்டி | 2.0309 | 2.0179 | 1.9561 | 1.5845 | 1.6138 | 1.6743 | 1.5271 | 1.9534 | 1.8902 | 1.9445 | 1.8227 | 1.9062 | 1.4035 | 1.7282 | 1.3600 | 1.6781 | 1.6755 | 1.6561 |
| நுவரெலியா | 1.1783 | 1.1117 | 1.0781 | 0.8348 | 1.0345 | 0.7434 | 0.7008 | 1.0940 | 1.0785 | 1.0769 | 0.9873 | 1.0513 | 0.6067 | 0.9190 | NQC | 1.3700 | 1.7025 | 1.2774 |
| காலி | 2.0986 | 2.0672 | 2.0121 | 1.6176 | 1.6954 | 1.7317 | 1.5271 | 2.1049 | 1.9650 | 2.0995 | 1.9318 | 1.9343 | 1.4306 | 1.7659 | 1.3836 | 1.7775 | 1.7564 | 1.7288 |
| மாத்தறை | 2.0917 | 2.0867 | 1.9747 | 1.5462 | 1.7160 | 1.5526 | 1.4850 | 2.1612 | 2.0013 | 2.0969 | 1.9491 | 1.9912 | 1.4071 | 1.5562 | 1.3680 | 1.7858 | 1.7630 | 1.7303 |
| அம்பாந்தோட்டை | 1.8587 | 1.8389 | 1.8136 | 1.5040 | 1.5913 | 1.3511 | 1.3119 | 1.9968 | 1.8878 | 1.8308 | 1.8618 | 1.8139 | 1.1658 | 1.6915 | 1.1414 | 1.7007 | 1.7558 | 1.6955 |
| யாழ்ப்பாணம் | 1.9435 | 1.9113 | 1.9071 | 1.5136 | 1.7213 | 1.3688 | 1.3493 | 1.9874 | 1.9399 | 1.9558 | 1.9351 | 1.9283 | 1.3821 | 1.7310 | 1.3725 | 1.6913 | 1.6018 | 1.6681 |
| கிளிநொச்சி | 1.4126 | 1.3819 | 1.2660 | 1.0435 | 1.2292 | 0.8380 | 0.8162 | 1.5726 | 1.1433 | 1.5603 | 1.1468 | 1.5314 | 0.6294 | 0.9329 | NQC | 1.6736 | 1.6085 | 1.6424 |
| மன்னார் | 1.0910 | 0.8700 | 0.8579 | 0.7415 | NQC | 0.5721 | NQC | 0.9894 | 0.9634 | 0.9699 | 0.7448 | 0.9387 | 0.8539 | 0.8029 | NQC | 1.3585 | 1.1037 | 1.3454 |
| முல்லைத்தீவு | 1.4372 | 1.3774 | 1.3670 | 1.0614 | 1.0612 | 0.8359 | 0.8766 | 1.7780 | 1.7247 | 1.7500 | 1.1653 | 1.6283 | 0.8223 | 1.6080 | 1.3845 | 1.7250 | 1.6543 | 1.7059 |
| வவுனியா | 1.9897 | 1.8771 | 1.8548 | 1.4795 | 1.6661 | 1.4461 | 1.3682 | 1.8884 | 1.7983 | 1.8682 | 1.6750 | 1.7184 | 1.2683 | 1.4114 | 1.1759 | 1.7465 | 1.7612 | 1.7296 |
| திருகோணமலை | 1.5941 | 1.5772 | 1.5707 | 1.2226 | 1.4976 | 0.9758 | 0.9662 | 1.6296 | 1.6060 | 1.6207 | 1.5900 | 1.5534 | 0.9773 | 1.5314 | 0.7567 | 1.4142 | 1.7195 | 1.3810 |
| மட்டக்களப்பு | 1.8041 | 1.7436 | 1.7227 | 1.4126 | 1.6717 | 1.2157 | 1.2049 | 1.4826 | 1.4358 | 1.4657 | 1.4513 | 1.4078 | 0.9940 | 1.3992 | 0.9497 | 1.4703 | 1.4609 | 1.3780 |
| அம்பாறை | 1.6449 | 1.6128 | 1.5855 | 1.3312 | 1.5174 | 1.1839 | 1.2761 | 1.4953 | 1.4692 | 1.4758 | 1.5054 | 1.3986 | 0.9293 | 1.3858 | 1.2914 | 1.5636 | 1.5479 | 1.5251 |
| புத்தளம் | 1.7970 | 1.7866 | 1.7830 | 1.3115 | 1.5939 | 1.3577 | 1.2976 | 1.6417 | 1.6374 | 1.6062 | 1.5752 | 1.5867 | 1.0424 | 1.2340 | 0.9666 | 1.5355 | 1.7520 | 1.5017 |
| குருநாகல் | 1.9810 | 1.9676 | 1.9415 | 1.4771 | 1.5174 | 1.5532 | 1.4567 | 2.0472 | 1.9718 | 2.0248 | 1.9380 | 1.9671 | 1.4074 | 1.7544 | 1.3491 | 1.6763 | 1.7426 | 1.6785 |
| அநுராதபுரம் | 1.8192 | 1.8075 | 1.7831 | 1.3324 | 1.3259 | 1.2389 | 1.2016 | 1.5592 | 1.4955 | 1.5575 | 1.5032 | 1.4718 | 1.1116 | 1.4725 | 1.0324 | 1.5159 | 1.7258 | 1.5901 |
| பொலன்னறுவை | 1.6878 | 1.5645 | 1.5516 | 0.9611 | 1.0669 | 0.8756 | 0.8340 | 1.1021 | 0.9402 | 1.0589 | 0.7985 | 0.8249 | 0.6455 | 0.8142 | NQC | 1.4394 | 1.5842 | 1.4761 |
| பதுளை | 1.6558 | 1.6434 | 1.5146 | 1.3082 | 1.2850 | 1.1079 | 1.0620 | 1.6939 | 1.6626 | 1.6901 | 1.5402 | 1.5996 | 0.9915 | 1.4712 | 0.9168 | 1.5034 | 1.7592 | 1.4772 |
| மொனராகலை | 1.4768 | 1.4567 | 1.4541 | 1.0472 | 1.1503 | 0.9606 | 0.8995 | 1.1248 | 1.1031 | 1.0792 | 0.9092 | 1.0290 | 0.6270 | 0.9145 | 0.6097 | 1.5035 | 1.5010 | 1.4530 |
| கேகாலை | 1.9103 | 1.9028 | 1.8671 | 1.4814 | 1.4523 | 1.3445 | 1.3290 | 1.8839 | 1.7685 | 1.8360 | 1.7689 | 1.7958 | 1.3872 | 1.5251 | 1.3587 | 1.6497 | 1.6375 | 1.6078 |
| இரத்தினபுரி | 1.8831 | 1.8665 | 1.8465 | 1.3746 | 1.3461 | 1.4145 | 1.3237 | 1.8367 | 1.7441 | 1.7745 | 1.6403 | 1.7462 | 1.2101 | 1.5149 | 1.1544 | 1.6855 | 1.7594 | 1.6615 |

| மாவட்டம் | கலை | கலை (வெகுஜன தொடர்பியல்) ★ | ஆற்றுகைக்கலை ★ | கலை (S.A.B) ★A | கலை (S.A.B) ★B | முகாமைக்கற்கை (S.V.T.) ★A | முகாமைக்கற்கை (S.V.T.) ★B | கட்டடக்கலை | வடிவமைப்பு | சட்டம் | தகவல் தொழில்நுட்பம் | முகாமையும் தகவல் தொழி.நு. | பொதுமுகாமை (நிர்வாகம்) | நகர நாட்டுத் திட்டம் | சமாதானமும் முரண்பாட்டுத் தீர்வும் | ஆயுர்வேதம் | யுனானி | நெசவு, துணி தொழில்நுட்பம் | உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6855 | 1.6665 | 1.0971 | 0.8986 | 1.9848 | 2.0225 | 1.8623 | 1.7882 | 1.7900 | 1.6453 | 1.3425 | 1.3159 | 1.0435 | 1.7702 |
| கம்பஹா | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6509 | 1.6345 | 0.9510 | 0.8346 | 1.9561 | 1.8250 | 1.6725 | 1.6965 | 1.6281 | 1.6453 | 1.3425 | 1.3159 | 0.9798 | 1.5177 |
| களுத்துறை | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6444 | 1.6383 | 1.2422 | 1.1066 | 2.0446 | 1.8712 | 1.7022 | 1.6752 | 1.7699 | NQC | 1.3425 | 1.3159 | 1.0857 | 1.6767 |
| மாத்தளை | 1.3838 | 1.2321 | NQC | NQC | NQC | 1.4949 | 1.4875 | NQC | NQC | 1.9164 | 1.6663 | 1.4935 | 1.7081 | 1.8266 | 1.6453 | NQC | NQC | NQC | 1.4885 |
| கண்டி | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6458 | 1.6369 | 0.8181 | 1.0184 | 2.0121 | 1.9081 | 1.8051 | 1.7360 | 1.7989 | 1.6453 | 1.3425 | 1.3159 | 1.1064 | 1.6985 |
| நுவரெலியா | 1.3453 | NQC | NQC | 1.4100 | NQC | 1.2745 | 1.3319 | 0.9150 | NQC | 1.6913 | 0.9789 | NQC | 1.7316 | 1.5958 | NQC | NQC | NQC | NQC | 0.8392 |
| காலி | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6900 | 1.6637 | 0.4210 | 1.1066 | 1.9632 | 2.0326 | 1.8128 | 1.7769 | 1.8546 | 1.6453 | 1.3425 | 1.3159 | 0.9550 | 1.7630 |
| மாத்தறை | 1.4204 | 1.2321 | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6855 | 1.6612 | 0.7995 | NQC | 1.9735 | 1.9978 | 1.8593 | 1.7811 | 1.8465 | 1.6453 | 1.3425 | 1.3159 | 1.1079 | 1.7169 |
| அம்பாந்தோட்டை | 1.4224 | NQC | NQC | 1.4100 | 1.5918 | 1.6651 | 1.6630 | 0.8454 | NQC | 1.9819 | 1.8363 | NQC | 1.7452 | 1.8170 | 1.6453 | 1.3425 | NQC | 1.1323 | 1.5679 |
| யாழ்ப்பாணம் | 1.4224 | NQC | NQC | 1.4100 | NQC | 1.6409 | 1.6204 | NQC | NQC | 1.6203 | 1.9178 | NQC | 1.6628 | 1.6009 | NQC | 1.3425 | 1.3159 | NQC | 1.6025 |
| கிளிநொச்சி | 1.4224 | NQC | NQC | NQC | NQC | 1.6038 | 1.5891 | NQC | NQC | 1.5467 | 1.0087 | NQC | 1.6111 | 1.4521 | NQC | NQC | NQC | NQC | 1.0703 |
| மன்னார் | 1.1268 | NQC | NQC | NQC | NQC | 1.2881 | 1.2394 | NQC | NQC | 1.1701 | NQC | NQC | 1.1303 | 0.9845 | NQC | NQC | NQC | NQC | NQC |
| முல்லைத்தீவு | 1.4224 | NQC | NQC | 1.4100 | 1.5918 | 1.6526 | 1.6249 | NQC | NQC | 1.7218 | 0.9982 | NQC | 1.6983 | 1.4881 | NQC | NQC | NQC | NQC | 0.9970 |
| வவுனியா | 1.4224 | NQC | NQC | NQC | 1.5918 | 1.6414 | 1.6387 | NQC | NQC | 1.6641 | 1.6248 | 1.7890 | 1.6999 | 1.4857 | NQC | 1.3425 | 1.3159 | NQC | 1.5036 |
| திருகோணமலை | 1.4076 | NQC | NQC | NQC | NQC | 1.3756 | 1.3712 | NQC | NQC | 1.6199 | 1.5356 | NQC | 1.7209 | 1.0292 | NQC | NQC | NQC | NQC | 1.2819 |
| மட்டக்களப்பு | 1.4224 | NQC | NQC | 1.4100 | NQC | 1.3991 | 1.4181 | NQC | NQC | 1.8179 | 1.6191 | 1.6098 | 1.6310 | 1.3856 | 1.6453 | 1.3425 | NQC | NQC | 1.7035 |
| அம்பாறை | 1.4224 | 1.2321 | NQC | 1.4100 | NQC | 1.5175 | 1.5029 | NQC | 0.5924 | 1.8247 | 1.3609 | 1.2724 | 1.7369 | 1.5325 | NQC | NQC | 1.3159 | 0.6821 | 1.5148 |
| புத்தளம் | 1.4224 | 1.2321 | 1.1405 | 1.4100 | NQC | 1.4770 | 1.4670 | NQC | NQC | 1.9492 | 1.6000 | 1.4766 | 1.5304 | 1.4959 | 1.6453 | NQC | NQC | 0.7709 | 1.5448 |
| குருநாகல் | 1.4006 | NQC | 1.1405 | 1.4100 | 1.5918 | 1.6595 | 1.6511 | 0.9761 | 0.9150 | 1.9784 | 1.9293 | 1.7163 | 1.7502 | 1.7735 | 1.6453 | 1.3425 | 1.3159 | 0.7205 | 1.6128 |
| அநுராதபுரம் | 1.4224 | NQC | NQC | 1.4100 | NQC | 1.5067 | 1.5258 | 0.9661 | 0.8898 | 1.9441 | 1.7912 | 1.4082 | 1.7852 | 1.8486 | NQC | NQC | NQC | 1.1323 | 1.4247 |
| பொலன்னறுவை | 1.3471 | NQC | NQC | 1.4100 | NQC | 1.4349 | 1.4180 | 1.0765 | NQC | 1.4807 | 1.4299 | NQC | 1.6889 | 1.2937 | NQC | NQC | NQC | 1.1323 | 1.3660 |
| பதுளை | 1.4224 | NQC | 1.1405 | 1.4100 | NQC | 1.4677 | 1.4619 | NQC | 1.1066 | 1.8024 | 1.6146 | 1.4104 | 1.7580 | 1.7641 | NQC | NQC | 1.3159 | NQC | 1.3724 |
| மொனராகலை | 1.4224 | NQC | NQC | 1.4100 | NQC | 1.4453 | 1.4329 | NQC | 0.2910 | 1.9628 | 0.8155 | NQC | 1.4957 | 1.3171 | NQC | NQC | NQC | NQC | 1.1155 |
| கேகாலை | 1.3567 | NQC | NQC | 1.4100 | NQC | 1.5946 | 1.5901 | 1.0146 | NQC | 1.9539 | 1.8188 | 1.7847 | 1.6413 | 1.7467 | NQC | 1.3425 | 1.3159 | 0.9509 | 1.3432 |
| இரத்தினபுரி | 1.4224 | NQC | NQC | 1.4100 | 1.5918 | 1.6550 | 1.6449 | NQC | NQC | 1.9904 | 1.6927 | 1.1670 | 1.7850 | 1.6559 | 1.6453 | 1.3425 | NQC | 0.7118 | 1.6758 |

★ - அகில இலங்கை ரீதியில் நூறுவீதம் தகுதி அடிப்படையில் தெரிவு

முகாமைத்துவக்கற்கை (S.V.T) A - வர்த்தகப்பிரிவு, B - சகல பிரிவுகளும்

கலை (SAB) A - கலைப்பிரிவு, B - சகல பிரிவுகளும்

# இஸ்ரேலியத் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்!

டெல்அவிவ்,டிசெ.12

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். குறைந்த 12 பேர் படுகாயமடைந்தனர். பணப்பரிவர்த்தனை நிலையம் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

உள்ளூர் நேரப்படி 12.30 மணியளவில் பணப்பரிவர்த்தனை நிலையத்துக்குள் ஒருவர் நுழைந்ததாகவும் -

அவர் பணம் மாற்றும் இடமருகே வந்த போது பெரும் வெடிச்சத்தம் கேட்டதாகவும் - அந்த நிலையத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது ஒருவன் முறைச் சம்பவம் என்று தெரிவித்த இஸ் ரேலியப் பொலீஸார் ஆயினும், இது தீவிரவாதிகளின் செயல் அல்ல என்றே கருதுவதாகவும் குறிப்பிட்டனர்.

இக்குண்டுத் தாக்குதலில் உள்ளூர் பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவர் காயமடைந்தார் என்றும் - அவரை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் - பொலீஸார் மேலும் கூறினர். (ஒ)



டெல்அவிவில் தற்கொலைத் தாக்குதல் [illegible] இடம்.

# காஸாவில் மூவர் சுட்டுக்கொலை! இஸ்ரேலுக்கு கடும் எச்சரிக்கை!!

ஜெருசலேம்,டிசெ.12

காஸா பள்ளத்தாக்கில் இஸ்ரேலியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

அங்குள்ள ரபா அகதிமுகாம் பகுதியினுள் நேற்று அதிகாலை திடீரென நுழைந்த இஸ்ரேலியப் படையினர் தாக்குதல் நடத்தினர்.

20 டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் அகதிமுகாம் பகுதிக்குள் நுழைந்த இஸ்ரேலியப்படையினர் அங்குள்ள வீடொன்றை சுற்றிவளைத்து நின்றனர். சில நிமிடங்களில் அந்த வீட்டின் மீது சரமாரியான தாக்குதல் நடந்தது.

இதில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் அங்குள்ள வைத்தியசாலைச் செய்திகள் கூறுகின்றன.

பலஸ்தீனத் துப்பாக்கிதாரி ஒருவரும் இரண்டு சிவிலியன்களுமே கொல்லப்பட்டனர். அவர்களில் 12 வயதுச் சிறுவனும் அடங்குவான் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

ஹமாஸ் இயக்கத்தின் மறைவிடம் ஒன்றையே தாக்கியதாக இஸ்ரேலியப் படை தெரிவித்தது. அங்கு மேலும தேடுதல்கள் நடைபெறுகின்றன.

கடந்த மார்ச் மாதம் ஜெருசலேமில் நடந்த குண்டுத்தாக்குதலுக்கு தி[illegible] திட்டிய ஹமாஸ் உறுப்பினரே கொல்லப்பட்டார் என்று இஸ்ரேலியப்படை கூறுகிறது.



இஸ்ரேலியத் தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீனர் ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.

ஹமாஸ் இயக்கம் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளது. இத்தாக்குதலுக்கு பழிக்குப் பழி வாங்குவோம் என்றும் அது எச்சரிக்கை செய்துள்ளது.

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இந்நிலையில் இஸ்ரேலியப்படையினரின இத்தகைய தாக்குதல்கள் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் பாலஸ்தீனப் பிரதமர் அகமது குரே இஸ்ரேலுக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

மேற்குக் கரையில் அமைக்கப்பட்டுவரும் தடுப்புச் சுவர் விவகாரத்தில் இஸ்ரேல் வேண்டுமென்றே நடந்துகொள்கிறது என்றும், காஸா, மேற்குக்கரை ஆகிய பகுதிகளில் தனது தேடுதல்களையும் தாக்குதல்களையும் அது அரங்கேற்றுகிறது என்றும் பிரதமர் அகமது குரே எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் தடைப்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அமெரிக்க போர் விமானத்தின் மீது பக்தாத்தில் ஏவுகணைத் தாக்குதல்!

பக்தாத்,டிசெ.12

அமெரிக்கப் போர் விமானத்தின் மீது நேற்றுமுன்தினம் மாலை ஈராக்கில் ஏவுகணைத் தாக்குதல் நடந்தது. இதில் அந்த விமானத்தின் இயந்திரப் பகுதி சேதமடைந்தது. உடனடியாக விமானம் தரையிறக்கப்பட்டது. விமானத்திலிருந்த 16 பேர் சிறு காயங்களுடன் உயிர்தப்பினர்.

விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

"தரையிலிருந்து ஏவப்படும் சிறிய ரக ஏவுகணை ஒன்றே விமானத்தைத் தாக்கியது. இயந்திரப்பகுதி கடும் சேதமடைந்ததால், விமானத்தை உடனடியாகத் தரையிறக்க வேண்டியதாயிற்று" - என்று அங்குள்ள அமெரிக்கப்படையின் பேச்சாளர் கிறிஸ் தோபர் தெரிவித்தார்.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள இடமொன்றில் இருந்தே கெரில்லாக்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று அமெரிக்கப்படை சந்தேகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியை அமெரிக்கப் படையினர் உடனடியாகச் சுற்றிவளைத்தனர். எனினும், எவரும் கைது செய்யப் படவில்லை.

இது இவ்வாறிருக்க, ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் போட்டிபோட முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அமெரிக்கப் பாதுகாப்புத் துணை அமைச்சா விடுத்தார். ஈராக்கின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் அறிவித்தார்.

ஆனால், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் போர் தொடுத்ததை எதிர்த்ததற்கு பழி தீர்க்கும் நடவடிக்கையே இது என்று 'த நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் இடம்பெறாத நாடுகள் ஈராக் புனர்நிர்மாணப் பணியில் ஈடுபட முடியாது என்று ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஏற்கனவே கூறியதையும் அப்பத்திரிகை நினைவு கூர்ந்துள்ளது.

எனினும், புனர்நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தைப் பெறும் ஏனைய நாடுகள் மேற்படி மூன்று நாடுகளின் ஒப்பந்தகாரர்களைத் தமது உதவியாளர்களாக இணைத்துக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளுநர் ஷ்வாஸ்நேகர் மீது நடிகை மீண்டும் வழக்கு!

கலிபோர்னியா,டிசெ.12

அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாண ஆளுநரும் ஹொலிவூட் நடிகருமாகிய ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் மீது விரக்தி கொண்டிருந்த நடிகை ஒருவர் மீண்டும் அவர் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

கலிபோர்னியாவின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள ஸ்வாஸ்நேகர் தனது பொறுப்புகளை மிகவும் கவனமுடன் ஆரம்பித்திருக்கிறார்.

இந்நிலையில், அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பது அங்கு பரபரப்பாகப் பேசப்படுகிறது. எனினும், இந்த வழக்குக் குறித்து பெரிதும் அலட்டிக்கொள்ளாத அவர் நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்ற கிறிஸ்மஸ் ஆரம்பக்கட்ட கொண்டாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டார்.

ஆளுநர் பதவிக்கான தேர்தல் பிரசாரத்தில் ஆர்னோல்ட் ஸ்வாஸ்நேகர் ஈடுபட்டிருந்தபோது அவர் மீது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டை முன்வைத்த அமெரிக்காவின் பிரபல நடிகை ரோண்டா மில்லரே இந்த வழக்கைத் தொடர்ந்தார்.

தனது தேர்தல் பிரசாரத்தின்போது ரோண்டா மில்லரை கிரிமினல் குற்றவாளி என்று ஷ்வாஸ்நேகர் வர்ணித்திருந்தார். இந்த வர்ணனையால் தனது படவாய்ப்புகள் குறைந்து விட்டன என்றும் அதனால் தனது வாழ்க்கையே பாழாகிவிட்டது என்று கூறியே ரோண்டா மில்லர் தற்போது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த அவதூறு வழக்குக் குறித்து தனக்குக் கவலையில்லை என்று ஷ்வாஸ்நேகர் தெரிவித்திருக்கிறார்.

கலிபோர்னிய அரசு சார்பில் நடந்த கிறிஸ்மஸ் கொண்டாட்ட ஆரம்ப விழாவில் கலந்துகொண்ட அவர் தன் மீதான வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்றும் கூறினார்.

# அடுத்துவரும் 300 ஆண்டுகளில் சனத்தொகை 900 கோடியாகும்!

நியூயோர்க்,டிசெ.12

அடுத்துவரும் 300 ஆண்டுகளில் உலகின் சனத்தொகை 900 கோடியை எட்டும் என்று ஐ.நா. அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஐ.நா. சனத்தொகை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தற்போது உலகின் சனத்தொகை 630 கோடி. அடுத்துவரும் 300 ஆண்டுகளில் இந்தத் தொகை 900 கோடியாக உயரும். எதிர்வரும் காலங்களில் பிறப்பு வீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2300ஆம் ஆண்டின் சனத்தொகை ஒரு சதுர அடிக்கு 10 பேர் இருக்கக்கூடிய அபாய நிலை வரலாம். குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் என்ற அளவைத் தொடர்ந்து கடைப்பிடித்தால், மக்கள் தொகை 2300ஆம் ஆண்டில் 900 கோடியாக இருக்கும்.

அத்துடன், வயதானவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிக்கும்.

2300ஆம் ஆண்டில் ஆபிரிக்காவின் மக்கள் தொகை 13 சதவீதம் முதல் 24சதவீதம் வரை அதிகரிக்கலாம். எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சை எளிதில் கிடைத்தால் மட்டுமே இந்நிலைமை உருவாகும்.

ஆனால், ஆசியாவில் மக்கள் தொகை அளவு தற்போது 61 சதவீதத்தில் இருந்து 55 சதவீதமாகக் குறையும். லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் கடற்பகுதியில் தற்போது உள்ள மக்கள் தொகையே தொடரும்.

அதேபோல், ஐரோப்பாவிலும் மக்கள் தொகை அளவு தற்போதுள்ள 12 முதல் 13 சதவீத அளவில் இருந்து 6முதல் 7சதவீதமாகக் குறையும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளோனிங்கைத் தடுக்கும் பிரேரணை ஐ.நா.சபையில் மீண்டும் ஒத்திவைப்பு!

நியூயோர்க்,டிசெ.12

குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்குவதை தடைசெய்யும் பிரேரணை மீதான விவாதத்தை ஐ.நா.சபை மீண்டும் ஒத்திவைத்தது.

பல உலக நாடுகள் குளோனிங் முறையை எதிர்த்து போர்க் கொடி தூக்கியுள்ளன. இதனால், குளோனிங் மூலம் மனிதர்கள் உருவாக்கப்படுவதைத் தடைசெய்யக்கோரி கொஸ்டாரிக்கா நாடு, ஐ.நா.சபையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தது.

இந்தப் பிரேரணை மீதான விவாதம் தொடர்ந்து இழுபறிப்பட்டு வந்தது. இந்த வருடம் இதுகுறித்து விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டும் இந்த விவாதத்தை ஐ.நா.சபை ஒத்திவைத்தது.

அடுத்த வருடம் இதுகுறித்து விவாதம் நடத்தலாம் என்று பெரும்பாலான உறுப்பு நாடுகள் வலியுறுத்தியதை அடுத்து, கொஸ்டாரிக்காவும் அதற்குச் சம்மதித்தது.

இருப்பினும், விவாதம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு சில நாடுகள் கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்தன. ஐ.நா.சபை இந்த விவாதத்தை ஒத்திவைப்பதால் குளோனிங் மூலம் மனிதர்களை உருவாக்குபவர்களுக்கு, அது அங்கீகாரமளிப்பது போல உள்ளது என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

## முஷாரப் வரவேற்பு!

இஸ்லாமாபாத்,டிசெ.12

இந்தியாவின் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி அளிப்பதாகவும் இந்தியா - பாகிஸ்தான் இடையே பேச்சு நடத்த இதனை முன்னேற்பாடாகக் கருதுவதாகவும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான யுத்த நிறுத்தம் மற்றும் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்பரப்பில் பறக்க அனுமதியளித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இரண்டு நாடுகளும் அமைதி நிலையை அடைந்துவருகின்றன. காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் பேசித்தீர்ப்பதற்கு இது ஒரு சரியான சந்தர்ப்பம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# மைக்கல் ஜக்ஸன் மீதான வழக்கு வழக்கம்போல் தள்ளுபடியானது!

சிறுவன் ஒருவனைப் பாலியல் பலாத்காரம் செய்தார் என்று கூறி பிரபல பாடகர் மைக்கல் ஜக்ஸன் மீது தொடரப்பட்ட வழக்கு வழமை போல் தள்ளுபடியானது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவன் ஒருவனை ஜக்சன் தனது வீட்டில் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கினார் என்று நீதிமன்றில் முறையிடப்பட்டது.

இந்நிலையில், மேற்படி முறையீடைச் செய்த சிறுவனின் பெற்றோர், ஜக்ஸன் நிரபராதி என்று தெரிவித்தனர்.

"ஜக்ஸனின் பண்ணை வீட்டில் தனது மகன் தனித்து விடப்படவில்லை. என்னோடுதான் இருந்தான். அப்படியிருக்கும்போது ஜக்ஸன் எப்படி எனது மகனைப் பாலியல் கொடுமைக்குள்ளாக்கியிருக்கமுடியும்"

என்று அந்தச் சிறுவனின் தாயார் பல்டி அடித்திருக்கின்றார்.

# கடந்த வாரத்தில் மட்டும் 15 அமெ. படையினர் பலி!

பக்தாத்,டிசெ.12

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படையினர் தொடர்ச்சியான உயிரிழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். கடந்த வாரம் மட்டும் அங்கு 15 அமெரிக்கப்படையினர் உயிரிழந்தனர்.

ஈராக் போர் ஆரம்பித்த பின்னர் இதுவரை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரில் 320 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் ஆதரவு கெரில்லாக்களுக்கு வெளிநாடுகளில் உள்ள தீவிரவாத இயக்கங்கள் உதவி வருகின்றன. வெளிநாட்டுத் தீவிரவாதிகளும் ஈராக்கிற்குள் ஊடுருவுகின்றனர் என்று அமெரிக்கப் படை கூறுகிறது.

போர் நடந்தபோது கொல்லப்பட்ட படையினரைவிட போர் முடிந்த பின்னர் கொல்லப்பட்ட படையினரே அதிகம் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனால், போர் முடிந்த பின்னர் படையினர் கொல்லப்படுவது குறைந்து வருவதாகப் பென்டகன் கூறியுள்ளது.

இதற்கிடையே, ஈராக்கில் பொது மக்கள் கொல்லப்படுவதும் அதிகரித்து வருவதாக அங்குள்ள மத அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இராசதுரை மதிவதனன் என்பவரது தேசிய அ.அ.(783563100V), விசேட அ.அ. இரண்டும் ஆனைக்கோட்டைக்கும் நவாலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயாளினி வீடியோ சென்ரர் என்னும் பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (25706)

மீசாலை வடக்கைச் சேர்ந்த S.தவமலர் என்பவருடைய தே.அ.அ. (இல. 748104003V), விசேட அ.அ. என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இ.சின்னம்மா, மடத்தடி, சண்டிலிப்பாய் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (சன்மானம் வழங்கப்படும்). (25689)

''கிருஷ்ணவாசா'' கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவசுந்தரலிங்கம் கெங்காதரனின் மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், வரிப்பத்திரம், முக்கிய ஆவணங்களுடன் டயறி, லப்டொப் கம்பியூட்டர் அடங்கிய பை (Bag) நீர்வேலிக்கும், புத்தூருக்கும் இடையில் (750 இல.பாதை) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியாளரிடம் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 060 221 3076 (25692)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1970இல பிறந்த, சுவாதி நட்சத்திரம், பாவம் குறைந்த கணக்கியல் துறையில் இறுதிப் பகுதியில் கல்வி கற்கும் லண்டன் வதிவிட அனுமதியற்ற மணமகனுக்கு கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து வதிவிட உரிமையுள்ள பெண்பிள்ளை தேவை. தொடர்பு: மே/பா க.வி.மயிலவாகனம், கைதடி கிழக்கு. (25643)

## மணமகன் தேவை

கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1976 ஆம் ஆண்டு பிறந்த பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2120, மே/பா உதயன். (25669)

## விற்பனைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள 1½ பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரில் வரவும். தொடர்பு: N.தவநேசன் (G.S.), C/o K.V.சற்குணம், கேணியடி லேன், கொககுவில் மேற்கு, கொக்குவில்.(25697)

## கோழிக்குஞ்சு விநியோகம

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள இன்று (12.12.2003) மாலை விநியோகிக கப்படும். பதிவுசெய்தோரும் தேவைப படுவோரும் தொடர்புகொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, T.P.:No.3529,2867. (25691)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய தனி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: 38/1, சோமசுந்தரம் லேன், கண்டுக்குழி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222 5964. (25671)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் இடம்பெயர்ந்தோர் செயற திட்டப் பிரிவினால் நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். மேல்நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராசா கலந்துகொள்வார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பட்டிமன்றச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் அப்போது இடம்பெறும்.

இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர் குழுவும், யாழ். மத்திய கல்லூரி மாணவர் குழுவும் பங்கேற்கவுள்ளன. இப்போட்டியின் மூன்றாமிடத்தை யாழ். சென்பற்றிக்ஸ கல்லூரிபெற்றது. (ஒ-5)

## லங்கா சீமெந்து லிமிட்டட் தொழிற்சங்கம்

(கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம்)

## விசேட பொதுக்கூட்ட அழைப்பிதழ்

**மேற்படி கூட்டம் 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் (காங்கேசன்துறை வீதி, மல்லாகம்) நடைபெறவுள்ளது.**

இவ்விசேட பொதுக்கூட்டம் சுயவிருப்பத்தில் ஓய்வுபெறும் திட்டத்தில் விண்ணப்பித்து ஓய்வுபெற்ற, சுயவிருப்பத்தில் ஓய்வுபெறும் திட்டத்தில் விண்ணப்பிக்காத, வயது வந்து ஓய்வுபெற்ற, சேவையில் இருந்து விலகிய, சேவை நிலையில் இருந்து தாமாக விலகியவர்களாகக் கருதப்பட்ட, இறந்தவாகள் மற்றும் சேவை நிலையில் உள்ளவர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களின் சம்பளநிலுவை (1990இல் இருந்து இன்றுவரை அவர்களின் சேவைக்காலம முடிவு வரையான) பெறுவது சம்பந்தமானது. மேற்படி நடவடிக்கை 27.01.2002இல நடந்த பொதுக்கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின்படி 330 தொழிலாளர்களின் கையொப்பத்துடன் 27.01.2002 திகதியிடப்பட்டு பதினொரு கோரிக்கைகளுடன் தொழில் ஆணையாளர்நாயகம் அவர்களிடம் முறையிடப்பட்டது.

மேற்கொண்டு இதுவிடயம் சம்பந்தமாக எமது தொழிற்சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், தற்போது இம்முறைப்பாட்டுக்கான விசாரணையின் பெறுபேறுகளையும், மேற்கொண்டு நாம் தொழிற்சங்க ரீதியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தங்கள் அனைவருக்கும் அறியத்தரும் நோக்கத்துடன இக்கூட்டம் கூட்டப்பட இருக்கின்றது.

எனவே, மேற்படி கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
செ.தேவகுணாளன் (25708)(35-21-14)

செயலாளர்
ஆ.முத்துவேல்

உ
சிவமயம்

## சிவாச்சார்யாபிஷேக தீஷாமந்திர உபதேச அழைப்பு

**(குருப்பட்டம் வழங்குதல்)**

அன்புடையீர்!

பரம்பொருளின் துணையுடனும், பெரியோர்களின் ஆசியுடனும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும மங்களகரமான சுபானு வருடம் கார்த்திகை மாதம் 26 ஆம் திகதி (12.12.2003) வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் 9மணி 35நிமிடம் வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

சிவப்பிரம்மஸ்ரீ **நல்லூர்தாச குருக்களின** சிரேஷ்ட புத்திரன்

**ந.பாலசுப்பிரமணியசர்மா** அவர்களுக்கு

சிவாச்சார்ய அபிஷேகம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் வருகைதந்து ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

தீட்சா குரு:- *சிவாகம கலாநிதி சிவஸ்ரீ* **வை.மு.பரமசாமிக்குருமணி** *(கோப்பாய்)*

**இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சம்பியன் ஒழுங்கை.
மாத்தனைக் கந்தசுவாமி கோயில்.
கொக்குவில் கிழக்கு. (25710)

தாங்கள் நல்வரவை நாடும்:
சிவஸ்ரீ நா.நல்லூர்தாசக் குருக்கள் -சீதாலட்சுமி
தம்பதிகள்.மக்கள் . மருமக்கள். (21-14-34)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 - 09 - 1935



விண்ணில் 24 - 11 - 2002

அமரர் **மயில்வாகனம் சந்திரசேகரம்**

திதி: 12.12.2003

அன்பின் ஐயாவே!

மரணம் உங்களை மறைத்து விட்டாலும்
மனதுள் உங்கள் நினைவுகளே நிற்கும்
ஒளியாய், நிழலாய், நிஜமாய் எப்போதும்
எங்கும் எதிலும் எல்லாமுமாக வரவேண்டும்.

உடுவில்.

மனைவி,
மகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள் } கனடா

(25711) (25-21-14)



# அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய நூலக

## புதிய கட்டடத் திறப்பு விழாவும் சிறப்புமலர் வெளியீடும்-12-12-2003

### ஆசியுரை

சனசமூக நிலையம் என்பது புதுமையும் புரட்சியும் கொண்ட அறிவுச்சாலையாகும். பாரதியார் தமது சொல், செயல் அனைத்தையும் ஆன்மீகத்துடன் புரட்சியாகத் தியாகம் செய்து சிந்தனையைத் தூண்டியவர். அதே சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்ட பாரதிதாசன் தமிழினத்தின் விடிவுக்காக சிந்தனைகளை அள்ளி விதைத்தவர். அவரின் பெயரில் இயங்கி இன்று புதிய கட்டடம் அமைத்து பெருவிழா காணும் சனசமூக நிலையமும் அதன் நிர்வாகத்தினரும் எல்லா நலன்களும் பெற்று "அறிவு நுட்பம் புதிய மலர்ச்சி" பெறவேண்டு மென்று வாழ்த்துவதுடன் கூடிய ஆசியுரையை வழங்குகிறேன். வேவிலந்தை அருள்மிகு அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மன் எல்லா நலன்களையும் அள்ளித் தர [illegible] என்று ஆசிகளை வழங்குகிறோம்.

பிரம்மஸ்ரீ சி.சுரேஸ்வரக் குருக்கள்
[illegible]குரு, முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
அல்வாய், பருத்தித்துறை.

### வாழ்த்துச் செய்தி

எண்ணில முடிதல் வேண்டும் - நல்லவே
எண்ணல் வேண்டும்
திண்ணில நெஞ்சம் வேண்டும் - தெளிந்த
நல்லறிவு வேண்டும்.

இச்சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய பாரதிதாசன் படிப்பகத்தின் வளச்சி அபரிமிதமானது. இதன் தொண்டு நீண்ட காலம் நிலைத்து கல்விப் பணியும் பொருளாதார சமூகப் பணிகளும் மேலோங்கி வளர எனது நல்லாசிகள்.

திரு.கி.நடராசா
தலைவர், பாரதிதாசன் சனசமூக நிலையம்.

### வளர்ச்சி முகங்கள்

1964 :- செய்திகளை அறியவும் வாசிப்புத்தன்மையை ஊக்குவிக்கவும், பத்திரிகைகள், சஞ்சிகைகள் அடங்கிய "பாரதிதாசகம் படிப்பகம்" ஆரம்பிக்கப்பட்டது.

1972 :- பன்முகப்பட்ட வளர்ச்சி நோக்கி பாரதிதாசன் "சனசமூக நிலையம்" என்றாகியது.

1980 :- மண் புழுதியில் இயங்கிவந்த நிலையம் அழகிய முகப்பொலிவுடன் கட்டடமாக வளர்ச்சி கண்டது.

1990 :- வெள்ளி விழாவையும், வெள்ளிவிழா மலரையும் கண்டது.

1998 :- போருட் உதவியுடன் பாரதிதாசன் "நூலகம்" என்ற பெரும் பகுதிக்குள் காலடி வை[illegible]தது.

2003 :- அழகிய இருமாடிக் கட்டடத்துடன் நவீன நூலகமாகக் காட்சியளிக்கின்றது.



(C/31828) (14)

### வாழ்த்துச் செய்தி

வடமராட்சி மக்களின் அறிவினை மேம்படுத்த ஒரு நூலகத்தினையும் அல்வைவாழ் மக்களின் சமூகப்பணியினை மேலோங்கச் செய்ய ஒரு சனசமூகநிலையத்தினையும் மக்கள் சிக்கன வாழ்வு வாழ்ந்திட ஒரு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினையும் சிறாரின் ஆரம்ப அறிவுக்கு வித்திட்டு உரமூட்ட ஒரு முன் பள்ளியையும் இளைஞர்களின் உடல், உள வளர்ச்சிக்கு வழி காட்ட ஒரு விளையாட்டுக்கழகத்தினையும் தன்னகத்தே கொண்டு கம்பீரமாக விளங்குகின்றான் பாரதிதாசன்.

பாரதிதாசனின் நற்பணியினையும், செயற்றிறனையும் நாணயத்தினையும் கணிப்பீடு செய்த போருட் நிறுவனம் தனது பொறுப்பிலுள்ள நூலகத்தினை பாரதிதாசனிடம் கையளித்து அதற்கேற்ற கட்டடம் ஒன்று அமைய ரூபா எட்டரை லட்சம் நிதியினையும் அளித்து பெருமை தேடிக் கொண்டது. மேலும் பாரதிதாசனில் பற்றுக்கொண்ட வெளிநாடுவாழ் அல்வையூர் இளைஞர்களது பெரும் பங்களிப்பினாலும் ஊரவர்களின் பங்களிப்பினாலும் இன்று ரூபா முப்பது லட்சத்தில் ஒரு புதிய நூலகம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

பாரதிதாசன் தனது சுய முயற்சியால் கல்வியுலகில் எங்ஙனம் தலை சிறந்து விளங்கினாரோ அவ்விதம் இந்நூலக உறுப்பினர் யாவரும் தமது சுயமுயற்சியினால் கல்வியுலகில் மிளிர வேண்டும் என்பதே நூலக நிர்வாகத்தின் பெருவிருப்பாகும்.

வடமராட்சி வாழ் மக்களனைவரும் இது எமது நூலகம் என்ற உணர்வோடு உறுப்பினர்களாக வேண்டும். இதனால் பலதுறைப்பட்ட புதிய ஆக்கங்களாயுள்ள நூல்கள், நூலகத்தினை வளம்படுத்தும் என்பது பலரின் எதிர்பார்ப்பு.

அல்வாய் பாரதிதாசன் நூலகம் வாசகர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்யவும் தமிழ் கூறும் நல்லுலகு நூலகம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

நா.சந்திரசேகரம்,
தலைவர், பாரதிதாசன் சி.க.கூ. சங்கம், அல்வாய்.

### வாழ்த்துச் செய்தி

பல இன்னல்களுக்கு மத்தியில் புத்தூக்கம் பெற்ற "பாரதிதாசன் நூலகம்" தனது புதிய இடத்தை நோக்கி இன்று நகர்கின்றது. வடமராட்சி வாழ் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள இந்நூலகம் தனது மற்றொரு புதிய அத்தியாயத்தை இப்பொழுது ஆரம்பிக்கின்றது. புதிய நடவடிக்கைகள் எப்பொழுதும் சவால்கள் நிறைந்தனவாகவே இருந்தாலும் "பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம்" அவற்றைக் கடந்து செல்லக்கூடிய வல்லமை கொண்டுள்ளது. இப்பொழுது ஆரம்பமான பணி தொடர்ந்து பல்கிப் பெருகி சகலருக்கும் நன்மை பயப்பதாக அமைய எமது பணிவான வாழ்த்துக்கள்.

நா.கோகுலதாஸ்
திட்ட அலுவலர், போருட், யாழ்ப்பாணம்.

**வாழ்த்துவோர் அல்வையூர் லண்டன் வாழ்:**

ஈஸ்வர மோகன் குடும்பம் | பொன் சிவா குடும்பம் | செல்வரஞ்சன் குடும்பம் | உதயகுமார் குடும்பம்

உதயன்

# அடுத்து இடம்பெறும் காய் நகர்த்தல் என்ன?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்து நல்லிணக்க அரசு அமைக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கனவு பெரும்பாலும் கலைந்து போய்விட்டது.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகார இழுபறியைத் தீர்ப்பதற்காக இருவருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நான்காவது சுற்று சந்திப்பும் முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையில் முடிவுற்றிருக்கிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கடந்த மாதமுற்பகுதியில் உருவான பிணக்கு, வெறும் அதிகார இழுபறியாக மட்டும் இருக்குமானால் அது ஓர் அரசியல் விவகாரம் என்ற அளவோடு கணிப்பிடப்பட்டு முக்கியத்துவம் பெறாமல் போயிருக்கக்கூடும்.

ஆனால், இந்த இழுபறி, இலங்கையின் தேசியப் பிரச்சினையாக நாட்டையே உலுக்கிவரும் இனப்பூசலுக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் முயற்சிக்கே முழு ஆப்புவைக்கும் விடயமாக மாறிவிட்டிருக்கின்றது. அதனால்தான் இவ்விவகாரம் அதிக கவலையை - சிரத்தையை - ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதியும் பிரதமரும் தங்களுக்கு இடையேயான அதிகார இழுபறிக்கு இணக்கத் தீர்வுகாண்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதியை காலக்கெடுவாக விதித்திருக்கின்றனர். அந்தக் காலக்கெடு காலாவதியாக இன்னும் மூன்று நாள்களே உள்ளன.

இணக்கத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறுகிவரும் இப்போதைய போக்கில், அந்தக் காலக்கெடுவுக்கு முன்னர் தீர்வு எட்டப்படுவது சாத்தியமல்ல என்பதை ஓரளவு உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

அவ்வாறு இணக்கம் ஏற்படாவிட்டால் அடுத்தது என்ன என்ற கேள்வி எழுகின்றது.

உடனடிப் பொதுத்தேர்தல் ஒன்றை நாடு சந்திக்க வேண்டிவரும் என்பதே பலரின் எதிர்பார்ப்பு - எதிர்வு கூறல் - ஆகும்.

தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசை காபந்து அரசாக நீடிக்க அனுமதித்து, நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி உத்தரவிடுவாரா? அல்லது அரசை வேறு தரப்பிடம் (தனது சார்பான கட்சிகளின் தரப்பில்) கையளித்த நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் நடத்துவதற்கு உத்தரவிடுவாரா? - இவற்றில் ஏதேனும் ஒன்றை ஜனாதிபதி செய்வதற்கு வழி இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதியின் அண்மைக்கால உரைகள் காபந்து அரசு விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பாக சில சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

நேற்றுமுன்தினம் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சி அரசின் தலைவராக இருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் 1978இல் கொண்டு வரப்பட்ட அரசமைப்பு தனக்குத் தந்திருக்கும் அதிகாரம் வானளாவியது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த அரசமைப்பின்படி எந்த அமைச்சையுமே வேறு யாரிடமுமே ஒப்படைக்காமல் முழு அமைச்சுக்களையுமே ஜனாதிபதியான தானே தனது வசம் வைத்திருக்கமுடியும் என்றும் -

தான் தனித்தே அரசைக் கொண்டு நடத்த முடியும் என்றும் -

மமதையோடு முழங்கியிருக்கின்றார் அவர். என்றாலும் தாராளமனப்பான்மையோடு ஐக்கிய தேசிய முன்னணியின் ஆள்களுக்குத் தாம் அமைச்சுப் பதவிகளை வழங்க முன்வந்தார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அரசியலில் குறுகிய லாபம் ஈட்டுவதற்காக - தேர்தல் வெற்றிகளுக்காக - தனது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையே கிடாசி எறிந்துவிட்டு, ஜே.வி.பியுடன் அணிசேர ஒற்றைக்காலில் நிற்கிறார் ஜனாதிபதி.

அதே தேவைக்காக அரசியலில் எந்த சித்து விளையாட்டை அவர் காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாதுகாப்பு, உள்துறை, வெகுஜன ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களை ஐ.தே.முன்னணி அரசிடமிருந்து பிடுங்கி வைத்திருக்கும் அவர், ஏனைய அமைச்சுக்களையும் அரச இயந்திரத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தினால் தாம் வெற்றிக் கனியைத் தட்டிப் பறிப்பது சுலபம் என்று சிந்திக்கக் கூடும். அப்படி ஓர் எண்ணம் அவரது மனதில் இருந்தால், தேர்தலுக்குப் போக முன்னர் அரச அதிகாரத்தை ஐ.தே. முன்னணியிடமிருந்து முழுதாகப் பிடுங்கிக்கொள்ள அவர் பின்நிற்க மாட்டார் என எதிர்பார்க்கலாம்.

அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால், நாட்டில் அரசியல் நெருக்கடி மேலும் தீவிரமடைவது தவிர்க்க முடியாததாகும் என்பது மட்டும் நிச்சயம்.

# இணைந்த சேவைகளைச் சேர்ந்த 1063 அரச ஊழியர் இடமாற்றம்

வலி.தெற்கு,டிசெ.12

வடக்கு - கிழக்கு மாகாண இணைந்த சேவைகளைச் சேர்ந்த ஆயிரத்து 63 அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சிக் கூட்டுறவு அமைச்சின் மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் இடமாற்றம் செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய எட்டு மாவட்டங்களுக்கிடையே இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது எழுதுவினைஞர்கள், அலுவலகப் பணியாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சாரதிகள், கணக்குப் பதியுநர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், சிறாப்பர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்த பணிநிலை உத்தியோகத்தர்களே இடமாற்றத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் 302 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 258 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 165 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 147 பேரும் வவுனியா மாவட்டத்தில் 91 பேரும் மன்னார் மாவட்டத்தில் 40 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 39 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்களுள் 674 பொது எழுதுவினைஞர்கள், 120 அரச அலுவலகப் பணியாளர்கள், 88 தட்டெழுத்தாளர்கள், 85 சாரதிகள், 66 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், 26 கணக்குப் பதியுநர்கள், 15 களஞ்சியப் பொறுப்பாளர்கள், 5 சுருக்கெழுத்தாளர்கள், 4 சிறாப்பர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி புதிய சேவை நிலையத்தில் தமது கடமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

கடமைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கான பெப்ரவரி மாத வேதனம் வழங்கப்படமாட்டாது எனவும் -

புதிய சேவை நிலையத்திலேயே இவர்களுக்கான பெப்ரவரி மாத வேதனம் வழங்கப்படும் எனவும் - திருமதி க.சிவசிதம்பரம் வலியுறுத்திக் கூறியுள்ளார். (ஒ-152)

# ஈழத்துச் சிதம்பரத்தில் அறப்பணி நிலையம் திறப்பு

காரைநகர்,டிசெ.12

காரைநகர் ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அறப்பணி நிலையத்தை திறந்துவைத்து அருளுரை நிகழ்த்தவுள்ளார்.

ஆசி உரைகளை நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர் ஆகியோரும் -

வாழ்த்துரைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், இந்து கலாசார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், யாழ். மாவட்ட சமுநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன், காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் உட்படப் பலர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்து கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் இந்தியச் சிற்பச்சக்கரவர்த்திகளின் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த அறப்பணி நிலையத்தில் தினசரி அன்னதானம் வழங்கப்படவுள்ளது. அறநெறிப் பாடசாலை, யாத்திரிகள் தங்குமிடம், குருமார் பயிற்சி நிலையம், நூலகம், கணனிப் பயிற்சி நிலையம் உட்பட பல்வேறு சமய சமூக அறப்பணிகள் நடைபெற உள்ளதாகவும் அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வும் அன்றைய தினம் நடைபெறும் எனவும் இந்து கலாசார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-73)

**நாளை**

கார்த்திகை 27
சனிக்கிழமை
(13.12.2003)
திதி : சதுர்த்தி
முற்பகல் 8.41 வரை
நட்சத்திரம்: பூசம்
நண்பகல் 12.03 வரை
சுபநேரம்: 3.20-4.50
ராகுகாலம்: 9.20-10.50
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

துன்பம் நேரும் போது அழுது புலம்புபவர்கள், இலகுவில் அடிமைகளாக நேரிடுகிறது.

# யாழ். வைத்தியசாலையில் சாரதிகளுக்குப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். வைத்தியசாலையில் உள்ள வாகனங்களைச் செலுத்த போதியளவு சாரதிகள் இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளிகளை எடுத்துச்செல்ல ஏற்கனவே மூன்று அம்புலன்ஸ் வாகனங்கள் உள்ளன. அத்துடன், மருந்து வகைகளை எடுத்துவரப் பயன்படும் லொறிகள் உட்பட பல்வேறு வாகனங்கள் மருத்துமனைப் பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில், இரு அம்புலன்ஸ் வாகனங்கள் அண்மையில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே வைத்தியசாலையில் உள்ள வாகனங்களைச் செலுத்துவதற்குப் போதிய எண்ணிக்கையில் சாரதிகள் இல்லாதநிலையில் தற்போது சாரதிகள் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

புதிதாக சாரதிகளை நியமிக்குமாறு சுகாதாரத் திணைக்களத்திடம் யாழ். வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து சாரதிகளை நியமிப்பதற்காகச் சுகாதாரத் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் கோரப்பட்டிருந்தன. ஆயினும், சாரதிகள் எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6)

# கல்வி வலயங்களில் கணனி வள நிலையங்கள்

வலி.தெற்கு,டிசெ.12

நாட்டில் உள்ள அனைத்துக் கல்வி வலயங்களிலும் ஒவ்வொரு கணனி வள நிலையங்களை அமைக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு கல்வி வலயங்களில் இருந்தும் நகரங்கள், பிரதேசங்களில் அமைந்துள்ள - போக்குவரத்துக்கேற்ற வசதிகளைக் கொண்ட - மையப்புறப் பாடசாலைகள் கணனி வள நிலையங்கள் அமைப்பதற்கெனத் தெரிவுசெய்யப்படவுள்ளன.

இதன்படி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் 24 கணனி வள நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

கணனி வள நிலையங்கள் நிறுவுவதன் மூலம் ஜி.சீ.ஈ. தராதரசாதாரண தர, உயர்தர மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குவதோடு, ஆசிரியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைக்காலப் பயிற்சிகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ம-152)

# சண்டிலிப்பாய் வீதியை திருத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.12

சண்டிலிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பித்து புனித அந்தோனியார் வீதி, சென்மேரிஸ் வீதியூடாகச் சென்று புனித பத்திமா வீதியைச் சந்திக்கும் வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.


சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக இந்த வீதியில் எந்த வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பாடசாலை மாணவர்கள் உட்பட அதிக எண்ணிக்கையானவர்கள் போக்குவரத்துச் செய்யும் இந்த வீதி குண்டும் குழியுமாக உள்ளதாகவும் -

மழை பெய்யும் போது சேறும் சகதியுமாக இருப்பதாகவும் - இதனால், பொதுமக்கள் குறிப்பாக மாணவ, மாணவிகள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியைப் புனரமைப்பது பற்றிப் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மழைகாலம் தொடங்க முன்பாக இந்த வீதி திருத்தப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்ட போதிலும், இதுவரை காலமும் அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-15)




# மீனா பாடசாலையில் இருந்து விலகுவாளா?

வீட்டிலுள்ள பிரச்சினையை மீனா ஆசிரியைக்குக் கூறுகின்றாள். ஆசிரியையின் உதவியுடன் மீனாவின் தாய் வங்கியில் கடன் வாங்கி பசுமாடு ஒன்றை வாங்குகின்றார். லலி என்ற பெயருடைய அப்பசுவின் பாலை விற்று கடைக்காரனின் கடனைக் கொடுக்க அவர்கள் ஆரம்பிக்கிறார்கள்.

வீட்டில் நிலைமை சிறிதளவு திருந்தி வருகையில் திடீரென தன் கடன் முழுவதையும் திரும்பக் கொடுக்குமாறு கூறுகிறார். அன்று பொழுதுபடுவதற்குள் கடனைக் கொடுக்காவிட்டால் லலியைக் கொண்டு போகப்போவதாக அவர் பயமுறுத்துகிறார். தந்தைக்கு சுகமில்லை. தாய் குழந்தையைப் பார்த்தல் வேண்டும். கடன் கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பு மீனாவுக்கும் அவளின் தம்பி ராஜூ வுக்கும் வருகிறது. தந்தையின் சைக்கிளில் அவர்களின் பாற்கடைக்குப் போகிறார்கள். அது மிகவும் தொலைவில் உள்ளது. அங்கு பணம் பெற்றுக்கொண்டு வீடு திரும்பும் சமயம் கடைக்காரன் லலியைக் கொண்டு போவதற்கு வந்துவிட்டார். கடைக்காரர் மாட்டை அவிழ்ப்பதற்கு முன் மீனாவின் கிளி மீது பணப் பையுடன் பறந்து வருகிறது. கடன் திரும்பக் கட்டப்பட்டு விட்டதால் கடைக்காரன் ஏமாற்றத்துடன் திரும்புகின்றான்.



(சி-31838)

அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# கட்டுடை, பிரான்பற்று பகுதிகளில் சமுர்த்தி வங்கிக் கட்டடங்கள்

சண்டிலிப்பாய்,டிசெ.12

மானிப்பாய் சமுர்த்தி வங்கிச் சங்கத திற்கான நிரந்தரக் கட்டடம் கட்டு டையிலுள்ள அரச காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென சமுர்த்தி அதிகார சபை ஒதுக்கீடு செய்த எட்டு லட் சம் ரூபாவைப் பயன்படுத்தி கட்டுடை சமுர்த்தி செயலணியினால் இந்தக் கட்டடம் நிறுவப்பட்டு வருகின்றது.

அடுத்த மாதம் இக்கட்டட வேலை கள் பூர்த்தியடையும் என்று சண்டி லிப்பாய் சமுர்த்தி வலய முகாமை யாளர் இதுபற்றி தகவல் தருகை யில் தெரிவித்தார்.

இதேவேளை - பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கான நிரந் தரக் கட்டடம் எட்டு லட்ச ரூபா செலவில் பிரான்பற்றில் நிர்மாணிக்கப பட்டு வருவது தெரிந்ததே. (எ-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் கி.மு.சங்கத்தின் முன்னாள் உபதலைவரும் விளையாட்டுக் காரியதரிசியும் பல வகையான விளையாட்டு வீரனும் வைரவர் தேவஸ்தான முன்னாள் தலைவரும் இளைஞர் முன்னேற்றச் சங்க முன்னாள் தலைவரும் சிறந்த பிரபல நடிகரும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய

**திரு.அரியகுட்டி கந்தசாமி**

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக 2003.11.21 இல் சத்தியப் பிரமாணஞ் செய்ததை யிட்டு அவரை நாம் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு.
யாழ்.பல்கலைக்கழகம்.

(25690)(34)

## ஆசிரியர், கணக்காளர்

பதவிகளுக்கான போட்டிப்பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 13.12.2003
பிரிவு I - 8 மணி பிரிவு II - 3 மணி
எமது வழமையான ஆசிரியர் குழு:
**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(25648) (24-21-14)

## உளம் மகிழ்ந்து பாராட்டுகின்றோம்

எமது அன்பிற்குரிய
**திருமதி சி.றதீபா**
அவர்கள் (B.A)
12.11.2003 அன்று
பேராதனை பல்கலையில்
வெளிநிலைக் கலைமாணிப்
பரீட்சையில்
சித்தியடைந்தமையையிட்டு
உளம் மகிழ்ந்து பாராட்டு
கின்றோம். அவர் மேலும்
பல பட்டங்களும்
வளர்ச்சியும் வாழ்வில்
உயர்ச்சி பெற்றுத்திகழ
எல்லாம்வல்ல
பத்திரகாளியை
வேண்டுகின்றோம்.



"றோகினி வாசா"
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (25649) (25)

வாழ்த்துவோர்:
திருமதி த.கமலாதேவி (மாமி)
திரு.க.சிறீக்குமார் (கணவர்)
பத்மநாதன், றோகினி குடும்பத்தினர்
கனகசபாபதி குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
மலர்வு
29
-
09
-
1938



விண்ணுள்
மறைவு
12
-
12
-
2002

**திருமதி இலங்காதேவி சிவநாயகம்**
திதி: பூர்வபக்க அட்டமி

சத்தியமே இலட்சியமாகக் கொண்டு எம்மை வளர்த்து
இத்தரணியிலே ஆசானாக்கி வாழ்வுதந்து பெருமைபெற்ற தாயே
கடமை முடிந்ததென்றோ அன்புக் கணவரிடம் சென்றீர்கள்
உடலில் உயிர் உள்ளவரை எமை வழி நடத்திடுவீர் அம்மா!

சேச் லேன், உடுவில்,
சுன்னாகம். (25560) (26)

அன்பு மக்கள்,
மருமக்கள், பேரன்.

## நாவலர் குருபூஜை

அகில இலங்கை திருமுறை மன்றம் வருடந்தோறும் யாழ். நாவ லர் கலாசார மண்டபத்தில் நடத்தி வரும் ஆறுமுகநாவலர் குருபூஜை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மன றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாய கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு ஆறுமுகநாவலர் சிலைக் குப் பூஜை, ஆராதனை இடம்பெறும். அவற்றைத் தொடர்ந்து தேவாரப் பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் நடைபெறும்.(ஒ)

## பொறிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் கால்களை இழந்தார்!

பன்றிக்காக வைக்கப்பட்ட பொறி வெடியில் அகப்பட்ட ஒருவர் இரு கால்களையும் இழந்தார். கடந்த 30ஆம் திகதி கிளிநொச்சியில் இச்சம் பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி கோணாப்புலத்தைச் சேர்ந்த கி.பரணிதரன் (வயது 24) என்ற குடும்பஸ்தரே இச்சம்பவத்தில் பாதிப்படைந்தவராவார். படுகாய மடைந்த அவர் யாழ்.போதனாவைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது இருகால்களும் படுமோசமா கப் பாதிப்படைந்த நிலையில் இருந் தன. அதனால் கடந்த செவ்வாய்க் கிழமை அவை அகற்றப்பட்டன.(ஒ)

## வலி.மேற்கில் சிறுவர் விவரம் சேகரிப்பு

வலிமேற்கு, டிசெ.12

வலிகாமம் மேற்குப் பிரதேச செய லாளர் பிரிவில் வசிக்கும் 18வயதுக் குட்பட்ட சிறுவர்களின் விவரங்கள் திரண்டப்படுகின்றன.

யுனிசெவ் நிறுவனத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க சிறுவர்கள் தொடர்பான சகல விவரங்களும் திரட் டப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில யுத்தத்தினால் சுமார் 65ஆயிரம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என் றும் யுனிசெவ் நிறுவனம் மதிப்பிடப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர் களை இனங்கண்டு அவர்களின் வாழ்க கைத்தரத்தை உயர்த்துவதற்காக சிறு வர்கள் தொடர்பான விவரங்கள் திரட டப்படுகின்றன. யுத்தத்தினால் ஊன மடைந்தவர்கள், பெற்றோரை இழந் தவர்கள், பாடசாலை செல்லாதோர், பாடசாலைகளிலிருந்து இடையில் விலகியவர்கள் உட்பட சகல விவரங் களும் சேகரிக்கப்படுகின்றன.(ஒ-175)

# வலி.தென்மேற்கில் முதியோர் சங்கங்களை நிறுவ ஏற்பாடு

சண்டிலிப்பாய்,டிசெ.12

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலர் பிரிவில் கிராமிய மட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களை ஒன்றிணைத்து சங் கங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

60 வயதிற்கு மேற்பட்ட முதியவா களுக்கு நலன்புரிச் சேவைகளை வழங் குவதையும் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு கிராம அலுவ லர் பிரிவிலும் முதியோர் சங்கம் ஆரம பிக்கப்பட வேண்டும் என்று முதியோ ருக்கான தேசிய சபை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது என்றும் - இதன் பிரகாரம் இந்த முதியோர் சங்கங் கள் கிராமஅலுவலர் பிரிவு ரீதியாக விரைவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன என்றும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரம்மஸ்ரீ ஆ.சுப்பி ரமணியசர்மா தெரிவித்துள்ளார்.

தங்கள் பிரிவிலுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை பொது இடத்திற்கு அழைத்து அவர்களி டையே தலைவர், செயலாளர், பொரு ளாளர், நிர்வாக சபை உறுப்பினர் ஆகிய 11 பேரைக் கொண்ட நிர்வாக சபையைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் -

இத்தெரிவு விவரங்களைத் தமக்கு இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என்றும் - தமது பிரிவு கிராம அலுவலர் களுக்கு கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் தெரி வித்துள்ளார். (எ-135)

அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ள
## ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை

பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்
**15-12-2003 திங்கட்கிழமை**
பிரிவு I - காலை 9.30 - 11.00, பிரிவு II - மாலை 3.00 - 4.30
வகுப்புகள் கிழமை நாள்களில் தொடர்ந்து நடைபெறும்.
1. நுண்ணறிவு
2. பொது அறிவு

ஆசிரியர்: **அ.குமாரவேல்**
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி (வர்த்தக வங்கிக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

(26-21-14) (C/31835)

## கூறுவிலை கோரல்

**தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்**

வாடகைக்கு விடுவதற்கேற்ற 150 (நூற்றி ஐம்பது) பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரப்படு கின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் சங்கக் காரியால யத்தில் படிவங்களைப் பெற்று 23.12.2003 (செவ்வாய்க்கிழமை) 5.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களை காரியாலய வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்.

(C31830)(34-14-21)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

## இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 14.12.2003 இற்கு முன் நேரில்
SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




ஜெகந்தன்-பொலின் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் செல்வன் **தார்மீகன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (12.12.2003) வெள்ளிக்கிழமை தனது இல்லத் தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார். *தார்மீகனை* அன்பான அப்பா, அம்மா, அன்பான அண்ணன்மார் சந்து, கீர்த்தன், இனிய கவி அக்கா, அப்பப்பா, திருத்தணி பெரியப்பா குடும்பத் தார், லண்டன் சுகன் சித்தப்பா குடும்பத்தார், வாகு சித்தப்பா குடும்பத்தார் சுவிஸ் ரஞ்சன் சித்தப்பா குடும்பத்தார், அம்மம்மா, தாத்தா, இனிய அருள் மாமா குடும்பத்தார், ஹற்றன் பெரியப்பா விவேகானந்தன் குடும்பத்தார், போல் குடும்பத்தார், அத்தான் தயாளன் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சுச்சம் ஞானவைரவர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்து கின்றார்கள்.

துருப்பிளவத்தை
அல்வாய் வடமத்தி
அல்வாய்.

அன்பு அப்பா,
சந்துஜன் அழகுச்சோலை.

# ஐ.தே.கட்சி மீது வீசியெறிந்த சேற்றை தானே கழுவும் நிலை ஜனாதிபதிக்கு!

**தற்போதைய ஜனாதிபதி 2005 டிசெம்பர் மாதம்வரை மட்டுமே ஜனாதிபதி பதவியை வகிக்கமுடியும். 2005இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஸ்ரீல.சு. கட்சி வேட்பாளரை நேரகாலத்துடன் அவரே அறிவிக்கவேண்டும். (அதாவது குறைந்தது ஒரு வருடத்துக்கு முன்னராகவேனும்) அவ்வாறு ஒருவர் ஜனாதிபதியால் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் அந்த வேட்பாளரின் பின்னால் செல்வர். கட்சியின் தலைமையும் அந்த வேட்பாளரிடமே செல்லும். அதிகாரங்கள் இருந்தும் பயனில்லை. அரசியல் அநாதை நிலை. சந்திரிகாவின் கலக்கத்திற்கு, குழப்பத்திற்கு இதுவே காரணம் என்கிறார் கட்டுரையாளர் உபுல்யோசெப் பெர்னாண்டோ. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

"நாட்டின் பாதுகாப்பு நிலை இன்று மோசமாகியுள்ளது."

"வரலாற்றில் இதுவரை ஏற்படாத சவாலுக்கு இன்று நாடு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது."

"நாடு அதளபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது."

"பிரபாகரனுக்கு யுத்தம் புரிய எதிராக ஒரு ஸ்திரமான அரசு இல்லாதநிலையில் இன்று இந்நாடு உள்ளது."

"இப்பெரும் ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும்."

"வாதப் பிரதிவாதங்களை விடுத்து நாம் ஒன்றிணைந்தாக வேண்டும்."

"முக்கிய அதிகாரபீடங்கள் ஒன்றாய் இணைய வேண்டும்."

"பிரச்சினைக்குத் தீர்வு தேசிய அரசொன்றே."

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை மூன்று அமைச்சுக்களின் பொறுப்பைத் தன்வசம் எடுத்துக்கொண்ட பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தான் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களில் வெளியிட்டிருந்தார்.

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில், மத்திய வங்கிக்கட்டடம், கொலொன்னாவ எண்ணெய்க்குதத் தொகுதி மற்றும் உலக வர்த்தக மையம் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் முழு நாடுமே பயங்கரவாத அச்சத்தின் வயப்பட்டிருந்த வேளையில், அவர் இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை...

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில்தான், வரலாற்றில் ஒருபோதும் இராணுவத்தினரால் இழக்கப்படாத ஆனையிறவு இராணுவ முகாமைப் புலிகளிடம் பறிகொடுத்து, விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் வரை முன்னேறிவந்தனர். இதனையடுத்து, யாழ். குடாநாட்டில் நிலை கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டமையால் நாடே துயரத்தில் மூழ்கியிருந்த வேளையில்கூட, ஜனாதிபதி இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை...

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் பொருளாதார வீழ்ச்சி உருவாகி, டொலரின் மதிப்பு நூறு ரூபாவரை வீழ்ச்சியடைந்து நாளுக்கு நாள் பொருள்களின விலைகள் அதிகரித்தவேளையில் கூட அவர் இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை...

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் மின்சார விநியோகம் தடைப்பட்டமையால் முழு நாடுமே இருளில் மூழ்க நேர்ந்த வேளையில்கூட அவர் இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை.....

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் கட்டுநாயக்க விமானத்தளம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்துச் சர்வதேச விமான சேவைகளும், கப்பல் சேவைகளும் நிறுத்தப்பட்டு நாட்டின் நிர்வாக இயந்திரம் முடக்கப்பட்டது. அவ்வேளையில்கூட, அவர் இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை...

அவரது பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்க நேர்ந்த சமயத்தில்கூட அவர் இவ்வித கருத்தெதனையும் வெளியிடவில்லை....

அவரது அரசு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்த சகல சந்தர்ப்பங்களிலும் நாடும், பொதுமக்களும் மற்றும் எதிரணியினரும் ஒன்றிணைவதன் மூலம் தன்னையும் தனது அரசையும் பலப்படுத்த வேண்டுமென்றே அவர் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளார்.

1999இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், அவர் நாட்டில் சமாதானத்தை உருவாக்கத் தனனுடன் இணைந்து செயற்படுமாறு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராயிருந்த ரணில் விக்கிரமசிங்கவைக் கோரினார். அவ்வேளையில், பொதுஜன ஊடகங்களால் பிரஸ்தாபிக்கப்பட்ட தேசிய அரசு குறித்த ஆலோசனையை "எவருக்கோ தேசிய அரசுக்கான வலிப்பு ஏற்பட்டுள்ளது!" எனக் கேலிசெய்து அந்த யோசனையை நிராகரித்தார்.

ஆனால், 2001ஆம் ஆண்டில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த தருணத்தில் தேசிய அரசொன்றை நிறுவுவது தொடர்பாகப் பேச்சு மேற்கொள்ள முன்வருமாறு தனது அரசில் பிரதமர் பதவிவகித்த ரத்னசிறி விக்கிரமநாயக்க ஊடாக ஐ.தே.கட்சிக்கு அழைப்பு விடுத்த வேளையிலும் "நாம் நாட்டின் தேசியப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கே முயற்சித்தோம். ஆனால், ஐ.தே.கட்சியினரோ அமைச்சுப் பொறுப்புக்களை எவ்விதம் பகிர்ந்து கொள்வது என்பதிலேயே குறியாய் உள்ளனர்" என ஆணவப் போக்குடன் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி.

அதேவேளை, 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி தோல்விகண்டதையடுத்து அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தேசிய அரசொன்றை நிறுவும் யோசனையை முன்வைத்தவேளையில், 2002ஆம் ஆண்டு மேதினப் பேரணியின் போது "தேசிய அரசு அமைப்பது குறித்து ஆர்வம் காட்டும் பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களைக் கடுமையாகத்

**வியெஸ்ரீ**

தண்டிக்க வேண்டும்" என ஜனாதிபதி சந்திரிகா கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர் அவ்விதம் கருத்து வெளியிட்டதோடு நின்றுவிடாது, தேசிய அரசு அமைப்பது குறித்துச் சாதகமாகக் கருத்து வெளியிட்டுவந்த பொ.ஐ.முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களான 'பௌசி' மற்றும் 'றிச்சட் பத்திரன' ஆகியோருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கைக்கும் உத்தரவிட்டார்.

### தேசிய அரசு

ஆனால், தற்போது நாடு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், நாடு அதளபாதாளத்தை நோக்கிச்சென்று கொண்டிருப்பதாகவும், நாடு பெரும் ஆபத்தில் சிக்கியிருப்பதாகவும், கருதி, அமைச்சுக்களைப் பகிர்ந்துகொண்டு தேசிய அரசொன்றினை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் சந்திரிகாவின் மனதில் திடீரென உருவாகியிருப்பதற்குக் காரணமென்ன?

உண்மையில் பிரச்சினை அங்குதான் உள்ளது. இன்று நாட்டின் எப்பகுதியிலும் யுத்தம் இடம்பெறவில்லை. இனி யுத்தமொன்று உருவாகச் சந்தர்ப்பமில்லையெனப் பிரபாகரனும் உறுதியளித்துள்ளார். அது மட்டுமன்றி விடுதலைப் புலிகள் அமைப்பின் அண்மைக்கால நடவடிக்கைகள் ஜனநாயக வழிமுறைகளை ஒட்டிச்செல்வதாக ஜனாதிபதி அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. சகலருக்கும் பொதுவான சாதாரண பொருளாதாரச் சிரமங்கள் நிலவிவருகின்றபோதிலும், அசாதாரண பொருளாதாரச்சிக்கல் நாட்டில் நிலவுவதாகக் கூறமுடியவில்லை. இருந்தபோதும், வேலைவாய்ப்பின்மை, கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் போன்ற சம்பவங்கள் அன்றுபோல் இன்றும் நாட்டில் இடம்பெறவே செய்கின்றன.

"அப்படியானால், நாடு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது எனச் சந்திரிகா கருதுவதேன்?"

"நாடு பெரும் பின்னடைவை நோக்கிச் செல்வதாகச் சந்திரிகா கருதுவதேன்?"

"நாடு பெரும் சவாலை எதிர்நோக்கியிருப்பதாக சந்திரிகா கருதுவதேன்?"

2005ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் வேட்பாளராகப் போட்டியிட முடியாத நிலையையே தனது பாதுகாப்பற்ற நிலையாகச் சந்திரிகா கருதுகின்றார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேளை கிட்டிவரும் நிலையில், தனது அரசியல் வாழ்க்கை அதளபாதாளத்தை நோக்கி நகர்வதால் தனது அரசியல் வாழ்க்கை அழிவதாகவே சந்திரிகா கருதுகின்றார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்வரை தனது அரசியல் செயற்பாடுகளை எவ்விதம் பாதுகாத்துக் கொள்வதென்பதே இன்று சந்திரிகா எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலாகும்.

இது இவ்விதமிருக்க, எதிர்வரும்



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னராவது நாட்டுமக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அவ்வாறில்லாவிடில், பிரசார நடவடிக்கைகளுக்குக் கால அவகாசம் போதுமானதாகாது. தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வி அவ்விதம் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரின் விவரம் வெளியிடப்பட்ட பின்னர் சந்திரிகாவின் நிலை என்னவாகும் என்பதே? அவ்விதம் வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட நாள்முதல், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் தீவிர ஆதரவாளர்கள் ஆகியோர் அவ்வேட்பாளரின் பின்னால் ஒன்று திரள்வதைத் தடுக்கமுடியாது. அவ்வேட்பாளர் எவராயிருப்பினும் வழக்கப்படி அவரே ஸ்ரீல.சு.கட்சியின் தலைவராக நேரிடும். இந்தவேளையில், 1994 ஆம் ஆண்டில் இப்படியான சந்தர்ப்பமொன்றில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஸ்ரீமாவோ அம்மையார் ஸ்ரீல.சு.கட்சியின் தலைமைப் பதவியை வகித்து வந்தவேளையில், சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீல.சு.கட்சி சார்பான வேட்பாளராக நியமனமான மறுநிமிடமே முழுக்கட்சித் தொண்டர்களும் சந்திரிகாவின் பின்னால் அணிதிரண்டனரல்லவா?

கடந்த சில நாள்களாக ஸ்ரீல.சு. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஒன்றுகூட நேர்ந்த வேளைகளிலெல்லாம் அவர்களது உரையாடல்களின் முக்கிய விடயமாக அமைந்தது மேற சொன்ன விடயங்களே. இவை சந்திரிகாவையும் அவஸ்தையுற வைத்ததென்னமோ உண்மைதான்.

### ஜனாதிபதி வேட்பாளர்

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் 2005ஆம் ஆண்டில் இடம்பெற்றாக வேண்டும். இதற்கு இன்னமும் இரண்டாண்டு காலம் உள்ளது. அடுத்த ஆண்டில், அதாவது 2004ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீல.சு.கட்சி சார்பான அபேட்சகராக எவரையாவது நியமித்தாகவேண்டும். கட்சிக்குள் எதனையாவது இந்த ஆண்டில் மட்டுமே தன்னால் செய்ய முடியும். இதுவே தனது அரசியல் வாழ்வின் கடைசி ஆண்டு. அடுத்த ஆண்டில் ஸ்ரீல.சு.கட்சி தன்னை எந்தவிதத்திலும் கணக்கெடுக்காது வேறொருவரைத் தேடிச்செயற்படும்."

இவ்வாறு சந்திரிகா சிந்திக்க நேர்ந்தால் அதில் புதுமை எதுவும் கிடையாது. அவ்விதம் அவர் சிந்தித்தால் அவர் இச்சிக்கலிலிருந்து கரையேற ஒருவழி தேடியாகவேண்டும். அரசமைப்பு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்வதன்மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்து, அடுத்து வரவுள்ள 2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர்த்துக் கொள்ளல் அல்லது தாம் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடக்கூடிய வகையில் அரசமைப்பு விதிகளில் வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ளல் ஆகிய இரு வழிகளே ஜனாதிபதிக்கு உள்ளன.

### சந்திரிகாவின் எதிர்காலம்

தற்போது தேசிய அரசொன்றை நிறுவவேண்டிய அவசியம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருப்பதன் இரகசியம் இதுவேயாகும். தனக்கு ஏற்பட்டுள்ள அரசியல் பாதுகாப்பின் மையை திசைதிருப்பிக் கொள்ள வேண்டிய தேவை சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளமையே அவர் தேசிய அரசொன்றை நிறுவ மேற்கொள்ளும் முயற்சிகளுக்கான காரணமாகும். தனது அரசியல் எதிர்கால வாழ்க்கை அதளபாதாளத்தில் வீழ்ந்துவிடும் நிலை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கான முயற்சியே இது.

### அரசின் தலைவி

"அது எப்படி"

தேசிய அரசின் தலைவி அவர். அதன்படி தேசிய அரசின் மூலம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு அவரே தலைமை வகிக்கிறார். அவர் உரிய முறையில் தலைமை வகிப்பாரெனில் சிறிய தேசியக் கட்சிகளின் ஆதரவை அவரால் பெற முடியும். தேசிய அரசின் தலைவி என்றவகையில் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையில் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் அவருடனிணைந்து செயலாற்ற நேரிடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து தான் விரும்பிய விதத்தில் நாடாளுமன்றத்தை ஆட்டிப்படைப்பது அவருக்கு அவ்வளவு சிரமமாக இருக்காது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவருக்குத் தேவையான விதத்தில் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும். அங்கும் அவர் உரிய விதத்தில் சமாதான முயற்சிகளுக்கு தலைமை வழங்கினால் சமாதான முயற்சிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அரசமைப்புக்கான திருத்தங்களுடன் அவர் விரும்பும் திருத்தங்களை இணைத்துக்கொள்ளமுடியும். தேசிய அரசின் தலைவி என்ற விதத்தில் நாட்டில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளும் நோக்கில் ஐ.தே.கட்சி ஆரம்பித்த திட்டங்களை தன்பொறுப்பில் ஏற்று 2005 ஆம் ஆண்டில் நாட்டு மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நன்மதிப்பை அவரால் பெறமுடியும். அவ்வேளையில், ஜனாதிபதி தனது கட்சியினர் மத்தியில் மாத்திரமன்றி நாட்டின் ஒட்டுமொத்த மக்களினதும் நன்மதிப்பைப் பெறுவார்.

### சிறந்த வழி

இந்தச் சிக்கல்களிலிருந்து கரைசேர்வதற்கு இதுவே சிறந்த வழியாகும். இந்த வழியை உரிய விதத்தில் உருவாக்குவதற்கு அரசமைப்பின உதவி மட்டும் போதாது. நீதித்துறையின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். தேசிய அரசு அமைப்பது தொடர்பான பேச்சு நிரலில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவருவதைத் தவிர்க்கவேண்டும் என ஜனாதிபதி முன் நிபந்தனை ஒன்றைச் சேர்த்துள்ளார் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உண்மையில் ஜனாதிபதியின் செயற்பாட்டிற்கு அரசமைப்பும் நீதித்துறையும் தீர்க்கமானவையாகும். ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று தாக்கல் செய்யப்படுமாயின் அதை நீதிமன்றத்தினால் மாத்திரமே தடுத்து நிறுத்தமுடியும் என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார். அதுபோலவே அவருக்குத் தேவையான அரசமைப்புக்கான திருத்தங்கள் மாத்திரமன்றி 2005ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவரால் அத்தேர்தலில் போட்டியிட முடியாத நிலையில் அவரது கட்சிசார்பில் வேறு ஒருவர் போட்டியிட்டு அதையடுத்து கட்சித் தலைமை தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் உருவாகுமானால் அந்தப் பிரச்சினைக்கு நீதிமன்றமே இறுதித் தீர்ப்பை வழங்கவேண்டும். அதேபோலவே, ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் பிரதமர் பதவிக்கு போட்டியிடக் கூடும். அவ்வாறு போட்டியிடும்போது தடைகள் ஏதும் உருவானால் அதற்கான இறுதி முடிவையும் நீதிமன்றமே தீமானிக்கும். இவை அனைத்தையும் ஜனாதிபதி நன்கு அறிந்திருக்கக்கூடும்.

"இப்படியே அவர் சென்றுகொண்டிருந்தால் அவர் அவ்வாறு வழி அமைப்பார்."

அவர் எவ்வாறு வழி அமைக்க முனைந்தாலும் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலம் அவர் தவறான வழியில் சென்றுள்ளார். தான் செய்த தவறை தேசிய அரசு என்ற போர்வையால் மூடி மறைத்துத் தனக்கு வரவுள்ள ஆபத்துக்களை நாடு எதிர்நோக்கும் ஆபத்துக்கள் எனத் திரித்து - அவற்றைப் பெரிதுபடுத்தி - "நாங்கள் அனைவரும் இணைந்து செயற்படுவோம்" எனக் கூறுகிறார்.

### ஐ.தே.க. நிலை

"ஐ.தே.கட்சி என்ன செய்யும்"

அங்கு போனாலும், இங்கு போனாலும், எங்கு போனாலும் தமக்கே லாபம் கிட்டும் என ஐ.தே.கட்சியினர் நினைக்கின்றனர். தேசிய அரசை அமைக்க சந்திரிகாவுடன் ஒத்துப் போனால் ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்தவேண்டும் எனக் கூறும் ஸ்ரீல.சு கட்சியின் ஒரு பகுதியினர் சந்திரிகாவைப் பகைத்துப் பிரிந்து செல்வர் என ஐ.தே.கட்சியினர் நினைக்கின்றனர். அவ்வாறான ஒரு நிலை உருவானால் ஸ்ரீல.சு.கட்சி இரண்டாகப் பிளவுபடும் என்பதே ஐ.தே.கட்சியினரின் கணிப்பாகும்.

ஐ.தே.கட்சியை எதிர்க்கும் ஸ்ரீல. சு.கட்சியினர் ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கப்படுவதை விரும்பமாட்டார்கள் என்பதை ஐ.தே.கட்சியினர் நன்கு அறிவர். எனவே, சந்திரிகாவுடன் தேசிய அரசு அமைக்கத் தாங்கள் ஒத்துக் கொண்டால் ஸ்ரீல.சு.கட்சிக்குள் எரிமலை வெடிக்கும் என ஐ.தே.கட்சியினர் நினைக்கிறார்கள். எனவே, தேசிய அரசும் ஐ.தே.கட்சிக்கு அச்சுறுத்தலாக அமையாது.

சந்திரிகா பொதுத்தேர்தலை அறிவித்தால் அதுவும் ஐ.தே.கட்சிக்கு விருப்பமானதே. சந்திரிகா இராணுவம், பொலீஸ் மற்றும் அரச ஊடகங்களைக் கையேற்றுள்ள நிலையிலும் 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பெற்ற மக்கள் ஆதரவைப் பெறலாம் என ஐ.தே.கட்சியினர் நம்புகின்றனர். நாட்டில் பாரிய பிரச்சினைகள் உள்ளன என சந்திரிகா தேர்தலின்போது கூறினாலும் அந்தப் பாரிய பிரச்சினை சந்திரிகாவே எனவும் அவரே சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் தடையாயுள்ளார் எனத் தேர்தலில் பிரசாரம் மேற்கொள்ளலாம் என ஐ.தே.கட்சியினர் நினைக்கின்றனர்.

தேசிய அரசு அமைக்கவும் இணங்காமல் பொதுத்தேர்தல் நடத்தவும் விடாமல், பொறுப்பேற்ற மூன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.12

புராமரிப்புப் பணிகள் காரணமாகப் பின்வரும் இடங்களில் நாளை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையின் பிரதேசப் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி மற்றும் வடமராட்சி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் திருத்த வேலைகள் முடிவடைந்தால் எந்நேரமும் மின்சாரம் வழங்கப்படலாம என்றும் - தெரிவிக்கப்பட்டது.(ஒ-5)

## கட்டடத் திறப்புவிழா

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய நூலக புதிய கட்டட திறப்பு விழாவும் நூல் வெளியீடும் இன்று பி.ப. 2 மணிக்கு நூலகத் தலைவர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக போரூட் அமைப்பின் யாழ். திட்ட அலுவலர் நாராயணசாமி கோகுலதாஸும் கௌரவ விருந்தினர்களாக சிவப்பிரம்மஸ்ரீ சி.சுரேஸ்வரக் குருக்கள், வணபிதா ஜேபி.அன்ரனிதாஸ், சுவாமி சித்ருபானந்தா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10)

## ஆய்வுகூட பணியாளருக்கு!

யாழ். மாவட்டப் பாடசாலைகளில கடமையாற்றும் ஆய்வுகூடப் பணியாளர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவிருந்த வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும் என யாழ். வலயகல்விப் பணிப்பாளர் பவிக்னேஸ வரன் அறிவித்துள்ளார். (ஒ-5)

## கிராம அபிவிருத்தி சங்கங்களின் பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய்,டிசெ.12

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக கேட்போர் கூட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரதேசசெயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா சிறப்புரை நிகழ்த்துவார்.(ஒ-135)

# ஐ.தே.கட்சி மீது வீசியெறிந்த சேற்றை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுகளை சந்திரிகாவிடமே இருக்கவும் ஐதேகட்சி விரும்புகின்றது. இதற்குக் காரணமும் உள்ளது. அதாவது இந்தநிலையே தொடர்ந்தால் சமாதானம் தொடர்பாக ஐ.தே. கட்சிக்கு எதிராக ஸ்ரீல.சு.கட்சியும் ஜே.வி.பியும எழுப்பும் குற்றச்சாட்டுகளுக்கு சந்திரிகாவே பதில் கூறும் நிலை உருவாகும என ஐ.தே.கட்சி நினைக்கிறது. இதை வேறுவிதத்தில் கூறுவதாயின் சந்திரிகாவும் ஸ்ரீல.சு. கட்சியினரும் ஜே.வி.பியினரும் ஒன்றுகூடி சமாதான முயற்சிகள் தொடர்பாக ஐ.தே.கட்சி மீது வீசிய சேற்றை தற்போது சந்திரிகாவே கழுவித்துடைக்கும் நிலை ஏற்படும் என ஐ.தே.கட்சி நினைக்கிறது.

பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா பொறுப்பேற்று ஒருமாதம் முடிவுற்ற நிலையிலும் அவ்வாறு பொறுப்பேற்றதற்குக் காரணமாகக் கூறப்பட்ட மணிராசன்குளம் (குரங்குபாஞ்சான்) முகாம தொடர்ந்தும் அதேநிலையிலேயே உளளது. திருகோணமலை கடற்படைத் தளத்தைச் சுற்றி புலிகள் முகாம்களை அமைத்துள்ளனர் எனத் தெரிவித்த குறச்சாட்டுத் தொடர்பாக தற்போது மௌனம். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம மக்களுக்கு அச்சுறுத்தல்கள் எனக் கூறப்பட்டது. அது தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதுவரை மோதல்களில் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளர். தற்போதும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அரசு ஹெலிகளில் சென்று வருகின்றனர். அரச ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் விடுதலைப் புலிகளின் தலைவரின் உரை ஒளிபரப்பப்படுகிறது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்பில் ஹோட்டல்களில் தங்கிப் பாதுகாப்புடன் விமான நிலையம் செல்கின்றனர்.


விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு வானொலி உபகரணங்களைப் பெறுவதற்கு அனுமதி வழங்கினார் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் மீது குற்றஞ்சுமத்திய சந்திரிகாவே தற்போது ஊடகத்துறைக்கும் பொறுப்பாயுள்ளார். அவரே ரூபவாஹினி மூலம விடுதலைப் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரையை உலகெங்கும் ஒளிபரப்புச் செய்ய அனுமதி வழங்கியுள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினரை வாபஸ் வாங்குகிறார் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மீது சந்திரிகா குற்றஞ்சாட்டினார். ஆனால், இன்று அவரே உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து (ஒருசில இடங்களிலிருந்து) படையினரை வாபஸ் பெற்றுள்ளார்.

"எனவே சந்திரிகா மேலும் சில காலம் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிப்பதை ஐ.தே.கட்சியினர் விரும்பாமல் இருப்பார்களா?"

மூன்று அமைச்சுக்களும் இன்னும் சில காலத்திற்கும் சந்திரிகாவிடம் இருப்பது குறித்து ஐ.தே.கட்சியினர் மகிழ்ச்சியடைவது இக்காரணத்தாலேயாகும்.

ஆனால், சந்திரிகாவும் திட்டத்துடன்தான் செயற்படுகின்றார். எப்படியாவது விடுதலைப் புலிகளைச் சமாதான மேசைக்கு அழைத்துவந்து தனது தலைமையில் சமாதான முயறசிகளை மேற்கொண்டு சமாதானம் என்னும் துரும்பை தனது கையில் எடுககவே சந்திரிகா முயற்சிக்கிறார். அவரால் அந்தத் துரும்பை கைப்பற்ற முடிந்தால் ஐ.தே. கட்சியினர் தங்களுக்குச் சாதகமாக அமையும் என நினைக்கும் விடயங்கள் அவர்களுக்குப் பாதகமாக அமைய வாய்ப்புகள் அதிகரிக்கும்.


ஆறாத்துயரில் ஆண்டோரெட்டு



அமரர்

ம.சி. கந்தையா

(கந்தா ஸ்ரோர்ஸ் M.S.K. பிரபல வர்த்தகர் வரணி)

அன்னையின் மடியில் 10.03.1936

ஆண்டவன் அடியில் 10.12.1996

திதி சதுர்த்தி

பொன்னொடு புவியும் புகழும் சேர்த்தே
பன்னரும் சிறப்புடன் இந்நிலம் வாழ்ந்தீர்
செய்யும் தொழிலே தெய்வம் என்னும்
ஒப்பரும் பொன்மொழிக்கு உதாரண மாகி
சீரிய மக்கள் சிறப்புடன் வாழ
அல்லும் பகலும் அயரா துழைத்தீர்
மக்கள் வாழவும் வழிபல அமைத்தீர்
விண்ணகம் சென்று ஆண்டு எட்டாகியும்
நின்னரும் நினைவுகள் நெஞ்சக மதனில்
வெள்ளித் திரையில் விளங்கிடு காட்சி போல்
தோன்றித் தோன்றி மறைகின்றனவே
நின்னரும் ஆன்மா நின்மல னடியில்
சாந்திபெறவே போற்றுவம் யாமே.

குருக்கள் துடியிருப்பு, வரணி.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# கணனிக் கற்கைநெறிகள்

இணுவில் பொதுநூலகம் 2004 ஆம் ஆண்டிற்கான புதிய கற்கை நெறிகள் 20.12.2003 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

**Micro soft Office**
**Corel Draw**
**Page maker**
**Children Program**

இணைய விரும்பும் மாணவர்கள் தமது பதிவுகளை நூலகத்தில் 18.12.2003 வியாழக்கிழமைக்கு முன் உறுதிப்படுத்தவும்.

இ.பொ.நூலகம்.

(சி-31840) (24-21-16)



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2221816 இருந்து 2237802 வரை
சீட்டிழுப்பு இல. 1460
திகதி 10.12.2003

வெற்றி எண்கள்

03 06 41 43 50

போனஸ் எண் 33

ஜக்பொட் பரிசு

ரூபா.3,976,850/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 3,976,850/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 88 | 10,000/- | 880,000/- |
| 3 | 4,987 | 500/- | 2,493,500/- |
| 2 | 82,434 | 20/- | 1,648,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 100,901 | 10/- | 1,009,010/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,231,190/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா.4,758,500/-

தொடர் இல. 3190310க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 13ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2233788-1-42
2237239-5-69
2224526-5-75
2237515-8-78
2224839-2-84

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைகல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கந்தையா

'பாக்கிய வாசா', இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தையா அவர்கள் 10.12.2003 அன்று காலமானார்.

அன்னார் ச.க.கந்தையா (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - [illegible]பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரியும் மனோகரன் (நிர்வாக [illegible] அதிகாரி - சவூதி அரேபியா), வசீகரன் (ஆசிரிய ஆலோசகர் - [illegible]) சுபத்திரா (M.Phil Research Associate, Nutrition & Behaviour - New zealand), சுபவதனி (முன்னாள் ஆசிரியை), சசீகரன் (கணக்காளர் - Lanka Tractors Ltd) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் கமலினி (இரசாயனப் பொறியியலாளர்), ஜெகந்தினி (ஆசிரியை - ரனவீம றோயல் கல்லூரி - பேராதனை), Dr.சிவகுமாரன் (Scientist Loboratry Operational Manager - New zealand), விசாகேந்திரன் (தொழில்நுட்பவியலாளர் - Bahrin) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவன் (New zealand), நிவேதினி (கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), கஷ்வர்த்தினி (கொ/இந்து மகளிர் கல்லூரி), லுக்ஷாயினி, ஹரிராஜன், டிலக்ஷாயினி, விஜிராஜன், லோகவர்த்தினி, மகிழ்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் வதிவிடத்தில் (B 1/5 அண்டர்சன் தொடர்மாடி) 13.12.2003 (சனிக்கிழமை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 14.12.2003 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திரு.ச.க.கந்தையா (கணவர்),
215B1/5 (அண்டர்சன் தொடர்மாடி),
பாக்வீதி, கொழும்பு - 05.
தொ.பே.இல.:- 2598218
0777-260247.

## கருத்தரங்கு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை வருடந்தோறும் நடத்தும் தியாகராஜா சுவாமிகள் உற்சவம் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது. இந்தக் கருத்தரங்கில் இசை விற்பன்னர்கள், இசைத்துறை சார்ந்தோர், இசை ஆர்வலர்கள் ஆகியோரைக் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## கல்வி மேம்பாட்டு பேரவையின் பொதுக்கூட்டம்

யாழ். மாவட்டகல்வி மேம்பாட்டுப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார்.(ஒ-5)

# யாழ்ப்பாணத்தைக் கல்விப் பாரம்பரியமிக்க பூமியாக்குவதற்கு ஒட்டுமொத்த கல்விச் சமூகமும் திரண்டு உழைக்கவேண்டும்

### பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவிப்பு

தெல்லிப்பழை,டிசெ.12

யாழ்ப்பாணம் ஒரு கல்விப் பாரம்பரியம்மிக்க பூமி என்பது இலக்கியங்களில் இடம்பெறும் விடயமாக மட்டும் இருக்கக்கூடாது. அதனை நடைமுறையிலும் சாதித்துக்காட்ட ஒட்டுமொத்த யாழ். கல்விச் சமூகமும் ஒன்றுதிரண்டு உழைக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் 3 ஆண்டு டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து வெளியேறிய ஆசிரியர்களின் பட்ட நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ். கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது அணி ஆசிரிய மாணவர்கள் பயிற்சியைப் பூர்த்திசெய்து வெளியேறுமுகமாக அவர்களுக்கான பட்ட நிறைவுச் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த மாதம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே துணைவேந்தர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இன்று யாழ். குடாநாட்டில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது கல்வித் தகைமையை மேம்படுத்த கல்வி நிறுவனங்களில் பட்டக் கற்கைநெறிகளை மேற்கொள்ளவேண்டும். அப்போதே வளமான மாணவ சந்ததியை உருவாக்கமுடியும். இன்றுவரை யாழ். பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்ற சுமார் ஆயிரத்து 500 பேரில் 90 வீதமானவர்கள் ஆசிரியர்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஆனால், இன்று யாழ். கல்வித்தரம் பின்தள்ளப்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்நிலையை நீக்க இங்குள்ள ஆசிரிய சமூகம் போராடவேண்டும். இலங்கை முழுவதும் வருடாந்தம் சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெறுகின்றனர். ஆனால், சுமார் 15 ஆயிரம் பேரே பல்கலைக்கழகத்தில் கற்க அனுமதிக்கப்படுகின்றார்கள். எஞ்சிய மாணவர்கள் கற்கவும் பட்டம் பெறவும் கல்வியியற் கல்லூரிகள் இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள், பல்கலைக்கழக வெளிவாரி அலகு, திறந்த பல்கலைக்கழகங்கள் என்பன உதவவேண்டும்.

வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி இன்று யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகமாக மாற்றப்பட்டுள்ளது. இது அங்குள்ள மாணவர்கள் உயர்தரமான பட்டக்கற்கை நெறிகளைக் கற்க வழிசெய்துள்ளது. அதுபோல, தென்னிலங்கை கல்வியியற் கல்லூரிகளில் பட்டக் கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன. அந்த வசதி இங்கும் ஏற்படுத்தப்படவேண்டும். நாமும் கல்வியியற் கல்லூரியோடு இணைந்த ஓர் அலகை உருவாக்குவது பற்றிச் சிந்தித்து வருகிறோம்.

இவ்வாறான பல வழிகளிலும் ஆசிரியர்கள் தமது வாண்மையை விருத்திசெய்து மாணவர்களின் உயர்ச்சிக்காக தமது உயரிய அர்ப்பணிப்பை வழங்கவேண்டும். 2010 ஆம் ஆண்டாவது எமது மாணவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறும் நிலையை உருவாக்கவேண்டும் - என்றார்.

மேற்படி பட்ட நிறைவு விழா நிகழ்வின் பின் கருத்து வெளியிட்ட யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் வெளியேறும் மாணவர்களுக்கு டிசெம்பர் மாத இறுதிக்குள் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் நியமனங்கள் வழங்கப்படுமென எதிர்பார்க்கிறேன். இந்த ஆசிரியர்கள் எமது பகுதியிலேயே நியமிக்கப்படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. ஏனெனில், இங்கு பெருமளவு ஆசிரியர்கள் தேவை உள்ளது. இனி இவர்களது நியமனம் தொடர்பான நடவடிக்கைகள் அரசியற் சக்திகளின் கைகளிலேயே உள்ளன என்றார். (ம-150)

## காலத்தின் பதிவு



இயற்கைக்குமா கோபம் எங்கள் மீது? படம்: தீபன்.

# வலி. மேற்குப் பிரதேசத்தில் 'டெங்கு' நோய் அபாயம்!

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிப்பு

வலிமேற்கு,டிசெ.12

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 'டெங்கு' காய்ச்சல் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர், 'டெங்கு' காய்ச்சலின் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டதாக மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து 'டெங்கு' காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்தாஸ் தலைமையில் நடைபெற்றது.

'டெங்கு' நோய் குறித்த எச்சரிக்கையையடுத்து வலிகாமம் மேற்குப் பிரதேசம் முழுவதும், மானிப்பாய் சுகாதார பகுதியினரும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினரும் இணைந்து நுளம்புகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஒ-175)

# மாவீரர்களின் பெற்றோரைத் தலைவர் பிரபா சந்தித்து உரையாடும் நாள் விரைவில் வரும்

### வலிகாமம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் உரை

வலி.மேற்கு,டிசெ.12

எமது தலைவர் இன்றைய சூழலில் சகல தரப்பினரையும் சந்தித்து உரையாடியுள்ளார். ஆனால், மாவீரர்களின் பெற்றோர்களை மட்டும் இன்னும் சந்திக்கவும் இல்லை; உரையாடவும் இல்லை. அவர்களைத் தலைவர் சந்தித்து உரையாடும் நாள் வெகு விரைவில் ஏற்படும் - இவ்வாறு தெரிவித்தார் சங்கானை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பு.

கலைநகர் ரேகுஜி சனசமூக நிலைய முன்றிலில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

சனசமூக நிலையத் தலைவர் பொ.காங்கேயநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வினை, மாவீரர்களின் பெற்றோர்களான மு.புஸ்பராசா, வே.சிவகணேசன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் அன்பு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

மாவீரர்களின் பெற்றோர்களை, எப்படி நான் சந்திப்பது, அவர்களிடம் நான் எதைக்கூறுவது என்ற காரணத்தினால்தான், தலைவர் அவர்களை இதுவரை சந்திக்கவில்லை. மாவீரர்களின் பெற்றோர்களைச் சந்தித்து உரையாடி நல்ல செய்தியை எமது தலைவர் மிகவிரைவில் தெரிவிப்பார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இன்று எமது இனப்பிரச்சினை சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகத் தெரிவதற்கு தலைவர் பல யுத்திகளைக் கையாண்டு அவற்றில் வெற்றியும் பெற்றுள்ளார். சர்வதேச சமூகமும் எமது தலைவரின் செயற்பாடுகளையும் பேச்சுக்களையும் மிக உன்னிப்பாக அவதானிக்கின்றது - என்றார். (ம-175)

# கைத்தொழில் முயற்சியாளருக்கு ரூ.10,000 சுழற்சிமுறைக் கடன்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கிய நான்கு லட்சம் ரூபா நிதியைக்கொண்டு கந்தரோடை விவசாயிகள் கழகம் 38 பேருக்கு சுழற்சிமுறைக்கடன்களை வழங்கியுள்ளது. சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கே இக்கடன் வழங்கப்பட்டது.

கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையக் கட்டடத்தில் வைத்து ஐந்தாவது தொகுதி பயனாளிகளுக்கு இக்கடன் வழங்கப்பட்டது.

விவசாய சம்மேளனத் தலைவர் செ.இலங்கைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயனாளிகளுக்கான கடன்தொகையை, வலிகாமம் தெற்குப் பிரதேசச் செயலாளர் எஸ்.திருவாகரன் வழங்கினார்.

இந்நிதியைக் கொண்டு பயனாளிகள் புதிய பொருள்களை உற்பத்தி செய்தோ அல்லது, தமது தொழில் துறைகளை மாற்றுவதன் மூலமோ தமது பொருளாதாரத்தை வலுப்படுத்திக்கொள்ளமுடியும். பலவிதமான உத்திகளைப் பயன்படுத்துபவர்களுக்கே சந்தைப்படுத்தல் வெற்றிகரமாக அமையும். எனவே, நீங்களும் பல உத்திகளைக் கையாண்டு இந்நிதியைக் கொண்டு புதிய பொருள்களை உற்பத்தி செய்து உங்கள் பொருளாதார நிலையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கடன் தொகையை வழங்கிய பிரதேச செயலர் எஸ்.திருவாகரன், பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில் கந்தரோடை கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-152)

# வலிகாமம் கல்வி மேம்பாட்டுப் பேரவை இராமநாதன் கல்லூரியில் திறப்பு

வலிகாமம்தெற்கு,டிசெ.12

வலிகாமம் கல்வி வலயத்துக்கான கல்வி மேம்பாட்டுப் பேரவை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வைபவரீதியாக நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி வலய உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா, யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் கை.கவியன்பன், உடுவில் பிரதேச உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஜெயப்பிரகாசம், வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி சுகுணராசா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி, நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வதற்கான காரணங்கள், இலவச கல்வியை பாடசாலைகளில் முறையாக நடைமுறைப்படுத்தல், ஆசிரியர்களின் வாண்மைவிருத்தி, மாணவர்களின் கல்வி மேம்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி இந்நிகழ்வின்போது கலந்துரையாடப்பட்டது.

மாணவர் கல்வி அபிவிருத்தி, ஆசிரிய வாண்மை விருத்தி, விளையாட்டு அபிவிருத்தி, தமிழ் மொழித் திறன் விருத்தி என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கென தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

வலிகாமம் வலய கல்விமேம்பாட்டுத் தலைவராக கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதனும், செயலாளராக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திருமதி கு.ஜெயவீரசிங்கமும், பொருளாளராக வலிகாமம் வலய கணக்காளர் வே.யோகேந்திரராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-152)

# சிறுவனின் சிகிச்சைக்கு உதவுங்கள்!

தெல்லிப்பழை, டிசெ.12



மல்லாகம், பழம்பிள்ளையார் ஆலய முன்றலில் வசித்து வரும் 11 வயதுச் சிறுவனுக்கு இதயத்தில் ஏற்பட்ட துவாரத்துக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிக வறுமையில் உள்ள சிறுவனின் குடும்பத்தினருக்கு உதவ மல்லாகம் லயன்ஸ் கழகத்தினர் முன்வந்துள்ளனர்.

கொழும்பு லேடி றிட்ஜ்வே மருத்துவமனையில் சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக 4 லட்சத்துக்கும் மேற்பட்ட பணம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்காகப் பரோபகாரிகளிடம் இருந்து லயன்ஸ் கழகம் நிதி உதவிகளை எதிர்பார்த்துள்ளது. இரக்க சிந்தை உள்ளவர்கள் இலங்கை வங்கி, காங்கேசன்துறை கிளை, மல்லாகம் கணக்கு இல.6952இற்கு நேரடியாக நிதியை வைப்புச் செய்யமுடியும். (ம-150)

# எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்த உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

எல்லைப்படை மாவீரர் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையினால் யாழ்.மாவட்ட உதைப்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை சுந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. முதற்றடவையாக மின்னொளியில் உதைபந்தாட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★இரவு 7மணி-நாவாந்துறை சென மேரிஸ் வி.க. எதிர் கம்பர் மலை யங்கம்பன்ஸ் வி.க.

★இரவு 8மணி சென் நீக்கிலஸ் வி.க. எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் வி.க.

இப்போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் நாளை இரவு இடம்பெறும்.

இதேவேளை இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் இடம்பெறும் காட்சிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணியும், யாழ். மாவட்ட தெரிவு அணியும் மோதவுள்ளன. (ம-5-6)




# இங்கிலாந்துடனான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட்: இலங்கைக்கு முதல் இனிங்ஸில் 382 ஓட்டங்கள்

இங்கிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 382 ஓட்டங்களைக் குவித்தது.

பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள், இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முகிய பங்காற்றினர்.

கண்டியில் நடைபெறும் இப்போட்டியின் முதல்நாளான நேற்று முன்தினம் ஆட்டமுடிவின்போது இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 277 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹஷான் திலகரட்ன 45 ஓட்டங்களுடனும் குமார் தர்மசேன ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் 2ஆவது நாளான நேற்றுக் காலை 12 ஆவது பந்து வீச்சில் அணித்தலைவர் ஹஷான் திலகரட்ன மேலதிக ஓட்டம் எதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் 9ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த குமார் தர்மசேனவும் திலுஷ பெர்னாண்டோவும் 76 ஓட்டங்களைப் பெற்றனர்.

தர்மசேன 29 ஓட்டங்களைப் பெற்றார். திலுஷ பெர்னாண்டோ 104 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கையின் வேகப் பந்துவீச்சாளரான திலுஷ பெர்னாண்டோ பங்குபற்றும் 2ஆவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

11ஆவது வரிசை வீரர் முத்தையா முரளிதரன் 22 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பௌண்டரி உட்பட 19 ஓட்டங்களைப் பெற்றார்.

அஸ்லி கைல்ஸின் பந்துவீச்சில் அவர் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

விக்கெட் காப்பாளர் கிறிஸ் ரீட் தனது கையால் பெய்லை தட்டிவிட்டிருக்கலாம் எனக் கருதிய நடுவர் அலிம்தார், முரளி ஆட்டமிழககவில்லை என முதலில் அறிவித்தார். எனினும், மூன்றாவது நடுவருடன் கலந்தலோசித்த பின்னர் முரளி ஆட்டமிழந்தார் என அறிவிக்கப்பட்டது.

இங்கிலாந்து வீரர்களில் அஸ்லி கைல்ஸ் 116 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பிளின்டொவ், கோர்ட்லி ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, ஆட்ட நேரம் முடியும்போது 4 விக்கெட் இழப்புக்கு 163 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் - இளவாலை



சென் நீக்கலஸ் விளையாட்டுக் கழகம்



யாழ். சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் - நாவாந்துறை



யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் - கம்பர்மலை

# ஆஸி.-இந்திய 2வது டெஸ்ட் இன்று

இந்திய -ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் இன்று ஆரம்பமாகிறது.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2ஆவது டெஸ்ட் போட்டிக்காக புதிய யுக்தியை வகுத்துள்ளோம் என ஆஸ்திரேலியா அணித்தலைவர் ஸ்ரீவ்வோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீவ்வோ கூறுகையில்,

"முதல் டெஸ்ட்டில் எமது வேகப்பந்து வீச்சாளர்களையும் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் சுலபமாக எதிர்கொண்டனர். பிரட் வில்லியம்ஸ் இருந்திருந்தால் ஓரளவு கட்டுப்படுத்தியிருப்பார் என்றே தோன்றுகிறது.

"இரு அணிகளும் மிகவும் வலுவான துடுப்பாட்டத்தைக் கொண்டுள்ளன. இந்நிலையில் 20விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல" -என்றார்.

இந்திய பந்துவீச்சாளர்களில் 3 பேர் பந்தை 'ஸ்விங்' செய்யும் வல்லமை பெற்றவர்கள். அது போன்ற வீச்சாளர்கள் வேறு எந்த அணியில் உள்ளனர்? எனவும் கேள்வி எழுப்பினார் ஸ்ரீவ்வோ.

தனது துடுப்பாட்டம் குறித்து அவர் கூறுகையில்,

"முதல் டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் 8 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பார்த்திவ் படேல் ஸ்டம்பிங் வாய்ப்பை நழுவவிட்டார். அது எனக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. ஆட்டமிழந்திருந்தால் அடிலெய்டில் மன இறுக்கத்துடனேயே களமிறங்க வேண்டியிருந்திருக்கும்.

டெண்டுல்கர், கில்கிறிஸ்ட் ஆகியோர் அத்தகைய மன இறுக்கத்துடனேயே இந்த டெஸ்டில் களம்காணும் வாய்ப்புள்ளது"- என்றார் ஸ்ரீவ்வோ.

முதல் இன்னிங்ஸில் கில்கிறிஸ்ட், டெண்டுல்கர் இருவருமே ஓட்டம் எடுக்காமலேயே ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்திய அணி தன்னம்பிக்கையுடன் இப்போட்டியில் களம காணுகிறது. முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை, வீரர்களின் தன்னம்பிக்கையை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

டெண்டுல்கர் ஆட்டமிழந்தும், இந்தியா 400ஓட்டங்களுக்குமேல் குவித்தது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய மைதானங்களுக்கு ஏற்ப கங்குலி தனது துடுப்பாட்ட நுணுக்கத்தை மாற்றிக்கொண்டமை குறித்து ஆஸ்திரேலிய பத்திரிகைகள் புகழாரம் சூட்டியுள்ளன.

ஸஹீர்கான், அகர்கர் ஆகியோர் சிறப்பாக பந்துவீசியதும், லக்ஷ்மன் துடுப்பாட்டத்தில் பிரகாசித்தமையும் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

அனைவரும் ஆரூடம் தெரிவித்தது போல் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தும் தொடராக அமையாமல் இந்தியா போராடத் தொடங்கியிருப்பது கிரிக்கெட் ரசிகர்களிடையே இத தொடரின்மீது ஆர்வத்தை அதிகரித்துள்ளது.

**இந்திய அணியில் முரளி கார்த்திக்**

இந்நிலையில், இந்திய சுழற் பந்துவீச்சாளரான முரளி கார்த்திக் இந்திய அணியுடன் இணைந்து கொளவதற்காக நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டார்.

"அடிலெய்ட் போட்டிக்கான இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் தேர்வுக்கு கும்ப்ளே, ஹர்பஜன், கார்த்திக் மூவரும் பரிசீலனையில் உள்ளனர்" என சௌரவ்கங்குலி தெரிவித்தார்.

அடிலெய்ட் மைதானத்தில் இந்தியா இதுவரை 7 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் தோல்வியுற்றுள்ளது. 2 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றுள்ளன.

1994 ஆம் ஆண்டு மைக் அத்தர்டன் தலைமையிலான இங்கிலாந்து அணி, இம்மைதானத்தில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்தது. அதன்பின் இம்மைதானத்தில் ஆஸ்திரேலியா இதுவரை டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடையவில்லை.



# கடல் கடந்த நாடுகளில் சைவ சமயக் கலாசாரம்

**சமயப்பணிகளை மேற்கொண்டு பலநாடுகளுக்கும் சென்று திரும்பியவரான, கல்வாகம் கதிரமலைச் சிவன ஆலயப் பிரதமகுரு, சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் உடுவில் கோட்ட சைவத்திருமுறை விழாவில் ஆற்றிய சிறப்புரையின் தொகுப்பு இது.**

"கடல் கடந்த நாடுகளில் வாழும சைவமக்களால் சைவசமயக் கலாசாரம் சிறப்பாகப் பேணப்படுகின்றது. பலநாடுகளில் சைவசமயத்துக்கான சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களை ஏளனமாகப் பார்க்கும் நிலையும் அவர்கள் எமது கலாசாரங்களைக் கைவிட்டு அந்நியக்கலாசாரங்களை மேற்கொள்வதாகக் கருதப்படுவதும் தவறானவையாகும். எமது சமயக்கலாசாரத்தைப் பேணித் தம்பிள்ளைகளுக்கும் அவற்றை ஊட்டிவளர்க்கும் பெற்றோர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர்"

எல்லோருக்கும் அறிமுகமான நாடு சுவிற்ஸர்லாந்து. உலகில் மிகநீண்ட மலைத்தொடர் இந்த நாட்டினூடாக ஊடறுத்துச் செல்கின்றது. இத்தாலியில் ஆரம்பித்து சுவிஸ் நாட்டில் முழுவதுமாகப் பரவி எகிப்து நாட்டிற்குள் நுழைந்து செல்கின்றது இம் மலைத்தொடர். அல்டிஸ் மலைத்தொடர் என இது அழைக்கப்படுகிறது.

**ஓங்காரானந்தா ஆலயம்**

இந்த மலை முழுவதும் பனியினால் சூழப்பட்டிருக்கும். ஓங்காரானந்தா என்ற பெயரோடு சிவன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'ஓங்காரானந்தர்' ஆலயத்தில் சிவலிங்கம் அனந்த சயன மஹாவிஷ்ணு ஆகிய இறை மூர்த்தங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆலயத்துக்குத் தினமும் பலர் வழிபடச் செல்கின்றார்கள். முற்றுமுழுதாகச் சுவிற்ஸர்லாந்து நாட்டிலே பிறந்து வளர்ந்த வெள்ளையர்களால் நெறிப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது இவ்வாலயம். இவ்வாலய சபையில் இரண்டாயிரம் பேர் வரை அங்கத்தவர்களாக உள்ளனர்.

இவர்கள் அனைவரும் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில சைவசித்தாந்தம், வேதாந்தம், திருமுறைகள் என்பவற்றைக் கற்று அவற்றில் தேர்ச்சி பெற்றவர்களால் பிறப்பால் சைவர்களாகவோ தமிழர்களாகவோ அல்லாதநிலையில் செல்வம் மிக்கதொரு நாட்டில் பிறந்து குடும்பத்திலே எந்தப் பணக்கஷ்டமும இல்லாதவர்களாக இவர்கள் உள்ளனர். அத்தகையவர்கள் தங்கள் வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து கோவில் பராமரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எமது நாட்டிலே இரண்டு விதங்களில் எங்களுடைய சமயத்தை நாம் புறக்கணிக்கின்றோம். ஒன்று பணத்துக்காக எமது சமயத்தைப் புறக்கணித்து வேறு சமயத்துக்கு மாறுவது. மற்றையது, எமது சமயத்தைப் பூரணமாக விளங்கிக்கொள்ளாதநிலை.

ஓங்காரானந்தா ஆலயத்தில் டிசெம்பர் மாதத்திலேயே அடுத்த வருடத்துக்கான தத்தமக்குரிய பரிபாலன நாள்களைக் குறித்து அரச விடுப்புப் பெற்றுக்கொள்கிறார்கள். தினமும் ஐந்து பேர் ஆலயத்தில் பணிபுரிகிறார்கள். இவர்கள் காவிஉடை, உருத்திராக்க மாலை, திருநீறு என்பன அணிந்து காணப்படுவார்கள்.

இவர்கள் ருத்ரவேதமந்திரம் ஓதுதல், ஆலயத்துக்கு வருபவர்களை வழிகாட்டி, வழிபாடு செய்ய உதவுதல், தீர்த்தம், திருநீறு என்பவற்றை வழங்குதல், புதிதாக வருபவர்களை வரவேற்றல் போன்ற பணிகளில் ஈடுபடுவர். நமசிவாயப் பதிகம் தினமும் எந்நேரமும் ஆலயத்தில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும்.

**கலாசாரக் கோல உடை**

எமது சைவசமயம் எமக்குக்காட்டுகின்ற கலாசார உடை மிகச் சிறப்புடையதாகும். ஆலயம் செல்லும் பெண்கள் எல்லோரும் முழு உடை அணிந்து, தலைக்குப் பூச்சூடும் எமது கலாசாரம் வெளிநாடுகளில் முழுதாகப் பேணப்படுகின்றது. சாதாரண உடையில் வரும ஆண்களுக்கு வாசலில் காவி வேட்டி, உருத்திராட்சமாலை போன்றவற்றை அணியச்செய்து வழிபாட்டுக்கு அனுப்பி வைப்பார்கள்.

**சிறுபிள்ளைகள் செல்லத்தடை**

ஆலயத்தினுள்ளே ஒன்பது வயதுக்குட்பட்ட பிள்ளைகள் செல்ல முடியாது. வழிபாட்டுவேளையில் அவர்களால் சிரமம் ஏற்படும், மன அமைதியுடன் வழிபட முடியாது. என்பதற்காகவே சிறுவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. தாய் அல்லது தந்தை சிறுபிள்ளையுடன் ஆலயத்தின் வெளியே நிற்கவேண்டும். பெற்றோர் ஒருவர் மாறி ஒருவர் ஆலயத்தினுள் சென்று வழிபாடு செய்துவிட்டு வந்து பிள்ளைகளை வீட்டுக்கு கூட்டிச் செல்வார்கள். அந்த அளவிற்கு ஆலயங்களிலே புனிதம் பேணவும், அமைதி காக்கவும் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆலயத்தினுள்ளே 24மணிநேரமும் வேதம், திருமுறை என்பன ஒலித்துக் கொண்டிருக்கும் அர்ச்சனைகளோ பூசைகளோ கிடையாது. தியானம் செய்ய பெரிய மண்டபம் உண்டு. தியானம் செய்பவர்களுக்கேற்ற ஒழுங்குமுறை இருக்கின்றது. ஒருபகுதியிலே யோகாசனத்துக்கென வகுப்புகள் நடைபெறும். அங்கு யோகாசனம் செய்யவும் பழக்குகிறார்கள்.

**சைவகலாசாரம்**

எமது நாட்டிலிருந்து கடல்கடந்த நாடுகளில் வாழும் எம்மவர்கள் ஆங்காங்கே பல சைவ ஆலயங்களை அமைத்துள்ளனர். அங்கெல்லாம் எமது கலாசாரம் சிறந்ததாகக் கருதப்பட்டுப் பல கல்வியாளர்களால் ஏற்றுகொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது.

எமது நாட்டிலே ஆலயங்களுக்குத் தினமும் அல்லது வெள்ளிக்கிழமைகளில் சென்று வழிபடக்கூடிய வசதி வாய்ப்புகள் இருப்பதுபோல வெளிநாடுகளில் இருப்பதில்லை. பெற்றோர்கள் பல கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ள ஆலயங்களுக்குப் பிள்ளைகளை வழிபாட்டுக்காகக் கூட்டிச் செல்கின்றனர். பிள்ளைகளுக்கு ஆலய வழிபாடு செய்யப் பழக்க வேண்டும். ஆன்மீக உணர்வு ஏற்படச்செய்ய வேண்டும். அந்நிய கலாசாரங்களை அவர்கள் பின்பற்றிவிடக் கூடாது என்ற ஆர்வத்தோடு பெரும் தொகைப்பணம் செலவழித்து நான்கைந்து மணித்தியாலம் பயணம் செய்து ஆலயங்களுக்குத் தமது பிள்ளைகளைக் கூட்டிச் செல்கிறார்கள்.

எமது நாட்டில் பெற்றோர்கள் அருகில் உள்ள ஆலயங்களுக்குக் கூடத் தாம் செல்வதோ, பிள்ளைகளை கூட்டிச செல்வதோ- அனுப்பிவைப்பதோ போதாது என்று கூறும் அளவிற்கு வெளிநாடுகளில் பெற்றோரும் பிள்ளைகளும் ஆலயவழிபாட்டுக்கு செல்வது அதிகமாக உள்ளது.

**அங்கீகாரம்**

வெளிநாடுகளில் சைவசமயக்கலாசாரம் பரிபூரணமான அங்கீகாரம் பெற்றிருக்கின்றது. ஆலயங்களிலே நடைபெறுகின்ற கலாசார நிகழ்வுகளுக்கு அரச அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. குறிப்பாகத் தைப்பொங்கல், தீபாவளி போன்ற திருநாள்களிலே அவற்றுக்குரிய நேரங்களில் விடுமுறை கொடுத்து அனுப்புகின்ற அளவுக்கு எமது கலாசாரம் அந்தந்த நாட்டினுடைய அமைப்புக்குள்ளே செயற்பட்டு பலப்பட்டிருக்கின்றது.

**தொகுப்பு: நிறைமுனைவன்.**

எமதுகலாசாரத்தினை - வழிபாட்டு முறையினை - நாம் வாழும் வாழ்க்கை நெறியினை அந்தந்த நாடுகள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, எமது கலாசாரத்தில் இருந்து விலகி விடுவதோ, மாறுவதோ எங்களுடைய தவறே தவிர செல்லுகின்ற நாடுகளிலே எந்தத்தவறும் இல்லை. எம்மை மாற்றிவிடும் அந்த நிலைப்பாடும் அவர்களுக்கில்லை.

**கலைகளில் ஆர்வம்**

எமது கலைகளான பரதநாட்டியம் சங்கீதம், திருமுறைகள் போன்றவற்றை மிகவலிந்து பெரும் பொருள செலவுசெய்து அங்கு பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றார்கள். எமது சமயத்தில் நாட்டம் ஏற்படவேண்டும். தமிழ் கலாசாரம் வளரவேண்டும். எமது நாட்டுப்பாரம்பரியம் - தொடர்பு - அந்தப் பிள்ளைகளிடம் தொடர்ந்து இருக்க வேண்டும். முக்கியமாக ஏனைய கலாசாரங்களை அவர்கள் பின்பற்றி விடக் கூடாது என்பது அந்தப் பெற்றோர்களின் நோக்கமாகவுள்ளன.

ஈவிந் துர்க்கை அம்மன் ஆலயத்திலே மாலை கட்டுதல், கோலம் போடுதல், திருமுறை ஓதல் போன்றவற்றில் போட்டி வைக்கிறார்கள். மாலைகட்டும் போட்டிக்குத் தேவையான பூக்களைப் பெற்றுக்கொள்ள எமது நாட்டுப் பணத்தில் ஐந்து லட்சம் ரூபா வரை செலவு செய்கிறார்கள். எமது நாட்டிலே நாம் பூக்களுக்காக செலவேதும் செய்வதில்லை. ஹொலண்ட் நாட்டிலே ஒரு பகுதியில் இதற்கென பூரங்களை வளர்க்கிறார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஆலயவழிபாடு மட்டும் பழக்குவதில்லை. திருநீறு, சந்தனம் போன்றவற்றை அணியும் முறைகள், அவற்றினால் ஏற்படும் பயன்பாடுகளை எல்லாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறி விளக்குவார்கள். குருவணக்கம் செய்யப்பழக்குகிறார்கள். அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்து காட்டிப் பழக்குகிறார்கள். இவை பற்றிய விளக்க நூல்கள் பிற மொழிகளில் வெளியிடப்படுகின்றன.


**தத்துவங்களில் நம்பிக்கை**

சைவசமயத்தவர்கள் என்றால் ஒழுக்கம் மிக்கவர்கள் பொய் சொல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை வெளிநாட்டவரிடம் உண்டு.

சைவசமயத்தின் மிகச்சிறந்த தத்துவங்களான புறச்சுத்தம், அகச்சுத்தம், ஒழுக்கம், வாழ்க்கை முறை என்பவற்றை வெளிநாட்டவர் பெரிதும் விரும்புகிறார்கள். முழுதாக உடை அணிதல் திருநீறு, உருத்திராட்ச அலங்காரங்கள் போன்ற புறச்சுத்தத்தையும், அன்பு செய்தல், மனிதநேயத்தை மதித்தல், பிறரின் துன்ப நிகழ்வுகளில் பங்குபற்றல், புரிந்துணர்வுத் தன்மை, உண்மைபேசுதல் பிற உயிர்களைக் கொல்லாமை போன்ற அகச்சுத்தம் ஒருவருக்கு ஒருத்தி என்ற ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றையும் வெளிநாட்டவர் விரும்பி வரவேற்கிறார்கள்.

சைவசமயத்தில் உள்ள சுவாமிகளைப் பற்றி அங்குள்ளவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். முருகனுக்கு தெய்வயானை, வள்ளி என்ற இரண்டு மனைவிகள் உள்ளார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற சிறந்த தத்துவ ஒழுக்கத்தைக்கொண்ட சைவ சமயத்தில் எப்படி முருகனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கமுடியும் எனக் கேட்கிறார்கள். முருகனின் மனைவிமார் அல்ல; முருகனின் அறிவு ஒன்று செயற்பாடு ஒன்று என்பதை விளக்கும் நிலை அது என விளங்க வைத்த பின்னரே ஏற்றுக்கொள்கிறார்கள்.

நாகரிகம் மிக்க நாடுகள் எனக் கருதப்படும் பிறநாட்டு மக்களையே சைவசமயக் கலாசாரம் போற்றப்படுகிறது. இவற்றைப் பார்க்கும் போது இங்கு சமயக் கலாசாரமுடைய சைவர்களாக இங்கு நாம் வாழ்கிறோமா? என்ற சந்தேகமும் எழுகின்றது.



காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பாள சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்சத்தில் சுவாமி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.

# சமயம் அறத்தின் வழியது

சமயம், நம் மனங்களைச் செம்மைப்படுத்துகின்றது. மனது செம்மையானால், மனிதன் செம்மையாகி விடுவான். அவனது எண்ணங்கள், பேச்சுகள், செய்காரியங்கள், யாவுமே செம்மையானவையாகிவிடும். சமயத்தைத் தவிர, வேறு எந்தச் சக்திக்கும், மனித மனங்களைச் செம்மையாக்கி அச்செயன்முறையினூடாக மனிதர்களைச செம்மையாக்கும் வல்லமைகள் கிடையாது என்பதை கடந்த கால அனுபவங்கள் காட்டுகின்றன. சமயந்தான் தொடக்கத்திலிருந்து மனிதனை மனிதனாக்கும் அற்புதப் பணியைச் செய்து

**ஞானக்கதிர்**

வந்தது, செய்தும் வருகிறது. இடைக்காலங்களில் விஞ்ஞானம் என்றும், பகுத்தறிவு வாதம் என்றும், நாஸ்திகம் என்றும் பல்வேறு விசைகள் தோன்றி மனிதர்களைச் சமயத்தினின்றும் பிரித்து எடுக்க முயன்றன. "உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்" என்றொரு பழமொழி உள்ளது. அது போல, மனிதர்களில் இருந்து வந்த கொஞ்சநஞ்ச நிம்மதி, அமைதி மற்றும் நற்குணங்கள், நற்செய்கைகள் கூட மனிதரை விலகி வெகு தூரம் சென்று கொண்டிருக்கின்றன. இன்று மனிதர்கள் சமய நம்பிக்கையை, இறை நம்பிக்கையை, சமய ஒழுக்கங்களை, சமய ஆசாரங்களை கைவிட்டு வருகின்றமையினாலேயே மனித மனங்கள் பழுது அடைந்த நிலையில், மனிதாபிமானமற்றவர்களாக, மனிதத் தன்மைகள் நீக்கப் பெற்றவர்களாக உள்ளனர்.

பால், சோறு முதலியன எம்மை வாழ்விக்கும் சத்து நிறைந்த உணவுகள் தான். ஆனால், அவை கெட்டுவிட்டால், நஞ்சாகி விடுகின்றன. பழுதாகிப்போன பாலையோ சோற்றையோ உண்டால் உயிருக்கே ஆபத்தாகி விடும்.

அவ்வாறுதான் மனிதரின் மனங்களும். மனம் உள்ளவன் மனிதன். மனத்தால் வாழ்பவன் மனிதன். மனம்போல வாழ்கின்றவன் மனிதன். மனம் நல்லதாக விளங்கினால், வாழ்வும் நல்லதாக அமையும். மாறாக, மனம் கெட்டதாக விளங்கினால் வாழ்வும் கெடுதல்கள் நிறைந்ததாகவே அமையும். இது சமயம் கண்டுபிடித்த உண்மை.

எம்முடைய மனங்களை நாம் என்ன நிலையில் வைத்திருக்கின்றோமோ, அதற்கேற்றவாறு எம்முடைய வாழ்வில் இன்பமோ துன்பமோ அமைகின்றது.

கேடுகள், கெடுதிகள், இன்பங்கள், மகிழ்ச்சிகள் என்பன விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் தோற்றுவிக்கப்படுவதில்லை. அவை யாவும் மனிதர்களின் மனங்களிலிருந்தே சிருஷ்டிக்கப்படுகின்றன. எமது சமயம் இவ்வாறு தான் கூறுகிறது. அது முழுதும் உண்மை.

பொறாமை, பேராசை, சுயநலம், சினம் என்பன மனித மனங்களில் படிந்துவிடுகின்ற மாசுகள். இவை கேடுகளை நன்கு போஷித்து வளர்க்கின்றன.

அறம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறும் வள்ளுவப்பெருந்தகை,

*"மனத்துக்கண் மாசு இலான்*
*ஆதல், அனைத்து அறன்"*

என்கிறார்.

ஒவ்வொரு மனிதனும் அறம் செய்ய வேண்டும் என்ற கருத்துப்பட, "அறஞ் செய விரும்பு" என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கிறார் ஔவைப் பிராட்டியார்.

அறஞ்செய்வது என்றால் அது என்ன இலேசுப்பட்ட காரியமா? பணம், பண்டம் வேண்டும். இடம், பொருள், ஏவல் வேண்டும். ஆள், அடுக்குகள் எல்லாம் வேண்டுமே என்று நினைப்பவர்கள்தான் எம்மில் பலர். ஆனால், உண்மை அதுவல்ல ஒருவரால் செய்யமுடியாத ஒன்றைச் செய்யும்படி ஒரு போதும் பெரியவர்கள் வற்புறுத்தமாட்டார்கள். "அறஞ்செய விரும்பு" என்று ஔவையார் சொல்கிறார் என்றால், எல்லோராலும் அறம் செய்யமுடியும் என்று அவர் எண்ணியுள்ளார் என்பது தான் அர்த்தம். ஆம், அறஞ்செய்வதற்கு மனம் இருந்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை. மனம் மனிதர்கள் எல்லோரிடமும் உண்டு என்பதில் சந்தேகமில்லை. அந்த மனத்தை அறஞ்செய்ய விரும்பும் மனமாக அமையச் செய்வதே மனிதன் செய்யவேண்டியது. இது ஒவ்வொருவருக்கும் இயலக்கூடிய காரியம். அதற்கு சமயத்தின் துணையை நாடவேண்டும். அது எங்களால் இயலவில்லை என்றால் அதனை வெறும் நடிப்பு, பாசாங்கு என்றுதான் கூற வேண்டும்.

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**

மனத்திலுள்ள மாசுக்களான பொறாமை, பேராசை, வெகுளி, இன்னாசொல், அகந்தை, மமதை என்பவற்றை நீக்கிவிட்டால் போதும் அச்செய்கையே அறம் ஆகிவிடும். எனவே, அறம் செய்வதற்கு பணம் தேவையில்லை. நல்ல மனந்தான் தேவை. இப்பொழுது பணம் இருந்து விட்டால் பணத்தினால் அறங்கள் பலவற்றைப் புரிவது இலகுபோல் தெரிகிறது. மனத்தினால் அறஞ் செய்வது கஷ்டம் போல் தோன்றுகிறது இல்லையா? இலகுவாகச் செய்து முடிக்கும் காரியத்திலும் பார்க்க கடினமான காரியத்தில் ஈடுபட்டுச் செய்துமுடித்தலே மனிதர்களுக்குப் பெருமை தரக்கூடிய விஷயமாகும். எனவே, மனத்திலுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, அகந்தை, மமதை என்பவற்றை அகற்றுதலான அறத்தைச் செய்து ஆனந்தம் பெறுவோம். அதற்கு இறைவனின் திருவருள் வேண்டும் என்பதை நினைவிற்கொள்வோம். இறைவனின் திருவருளைப் பெற்றே மனங்களை அறத்தின்பால் செலுத்த முடியும். இறைவனைச சிந்தித்தல், தியானித்தல், நேசித்தல், பூசித்தல், போற்றுதல், துதித்தல் அவனுடன் ஒன்றித்தல் மூலமே இறைவனின் திருவருளைப் பெறமுடியும். ★

# புலிகளையும் தமிழர்களையும் பிரித்துப் பேசுவது அரசியல் முதிர்ச்சியற்ற முட்டாள்தனமான செயல்

## தமிழ்க் கூட்டமைப்பின் கிருஷ்ணபிள்ளை எம்.பி. சாட்டை

கொழும்பு,டிசெ.12

தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் பிரித்து இனங்காட்ட முனைவது அரசியல் முதிர்ச்சி இன்மையையே காட்டுகின்றது. தமிழர்களின் ஏக தலைவர் பிரபாகரன்தான். இதை எவராலும் மறுக்கமுடியாது. சில அரசியல்வாதிகள், தமிழர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் அரசியல்வாதிகளையும் தனித்தனியாகப் பிரித்து இனம் காட்டி தமக்கு அரசியல் இலாபம் தேடக்கூடாது.

இப்படி ஒரு சாட்டையடி கொடுத்தார் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பு உறுப்பினரான ஞா.கிருஷ்ணபிள்ளை.

நேற்று நாடாளுமன்றத்தில் வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

நேற்றுக் காலை 9.30மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது நேற்றைய அமர்வின் போது வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு, வடமேல் பிராந்திய அபிவிருத்தி, மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதங்கள் நடைபெற்றன.

எதிர்க்கட்சிகளின் சார்பில் பொ.ஐ. முன்னணி உறுப்பினரான ரெஜி ரணதுங்க விவாதத்தை ஆரம்பித்தார்.

எந்த ஒரு விருந்து வைபவம் என்றாலும் அங்கே பரிமாறப்படும் உணவுகளைப் பற்றி விமர்சிப்பதும் அதில் குறைகாண்பது வழமை.

அதேபோன்று அமைச்சர் ரவி கருணாநாயக்காவின் அமைச்சுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களும் உள்ளடக்கப்பட்டிப்பதாலோ என்னவோ அவற்றில் எதிர்க்கட்சியினர் குறைகண்டு சேறு பூசுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அமைச்சு தொடர்பாகவோ, அவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவோ, அதன் சேவைகள் தமது பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையோ அவர்கள் முன்வைக்கவில்லை.

மாறாக அமைச்சருக்குத் திடகாத்திரமான உடற்கட்டு என்றும், அவர் உறவினர்களுக்கு மட்டுமே உதவுகின்றார் என்றும் அழகான பெண் ஒருவருக்கு அவசியமற்ற வகையில் நியமனம் வழங்கினார் என்றும் எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்தனர்.

இந்தவேளையில், அமைச்சரின் பாரியார் உட்பட சில பிரமுகர்கள் சபாநாயகரின் கலரியில் இருந்து அவதானமாகக் கவனித்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி நேரடியாகவே சில குற்றச்சாட்டுகளை சமர்ப்பித்தார்.

அரசு புதிய நியமனங்களை வழங்கக்கூடாது என சுற்றுநிருபம் அனுப்பியுள்ளது. இதனை அனைவரும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால், அமைச்சர் ரவி கருணாநாயக்க அந்த சுற்றுநிருபத்தையே உதாசீனம் செய்துவிட்டு நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் நியமனங்களை வழங்கியுள்ளார். எந்த விதமான அடிப்படைத் தகைமைகளும் இல்லாத இந்த நபர்களுள் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 80 ஆயிரம் ரூபாவும் சம்பளமாக வழங்கப்படுகின்றது.

அதேவேளை, ச.தொ.ச. நிறுவனத்தில் கூடுதலான ஆள்கள் உள்ளனர் என்று ஆள்குறைப்பு செய்கின்றது. கடமையாற்றும் ஊழியர்களிடம் அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியும் கூட மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார் ஜே.வி.பி. எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தி

இவர்களுக்கு அவர்களுடைய பாணியிலேயே பதிலடி கொடுத்தார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த கால அரசு வங்குரோத்து நிலையில் ஒப்படைத்த ச.தொ.ச. நிறுவனங்களை இன்று தனியார் சுப்பர் மார்க்கட்டுகளுடன் போட்டியிடும் நிலைக்கு உயர்த்தியுள்ளோம். ச.தொ.ச. நிறுவனத்தில் 4,500 பேர் மேலதிக ஊழியர்களாக இருக்கின்றனர்.

இவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் அவர்களுக்கும் தொழில் வழங்கும் முகமாகவே ச.தொ.ச. இரவு-பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது மிகவும் வெற்றியடைந்துள்ளது-என்று குறிப்பிட்டார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

இந்தச் சமயத்தில் குறுக்கிட்ட ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி "அது உண்மைதான். ஆனால், இந்த இரவு-பகல் சேவையினால் பல குடும்பங்களில் குடும்பத் தகராறுகள் ஏற்பட்டுள்ளன." என்று கூறினார்.

"அதை சமாளிக்க வேண்டிய தகைமை உங்களுக்கு இருந்தால் போதும்" என்று பதிலடி கொடுத்து அமர்ந்தார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

தமிழர் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான சிவாஜிலிங்கமும், கிருஷ்ணபிள்ளையும் ஆக்கபூர்வமான சில ஆலோசனைகளை முன்வைத்தனர்.

அதாவது, இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதை வரவேற்கின்றோம். ஆனால், இந்தியாவிலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு கொண்டு வரப்படும் பொருள்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே, நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைமுகத்திற்கு அல்லது வல்வெட்டித்துறைமுகத்திற்கே நேரடியாக பொருள்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் செலவீனங்களையும் குறைக்கமுடியும்.

பாண்டிச்சேரிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பிரயாணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் சுற்றுலா பிரயாணிகளின் வருகையையும் அதிகரிக்க முடியும் என்று ஆலோசனை கூறினார் சிவாஜிலிங்கம் எம்.பி.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி உறுப்பினரான கிருஷ்ணபிள்ளை வேறொரு கோணத்தில் சாடினார்.

அவர் கூறியவை அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாக இருந்தாலும், சபையினரின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தன. சில அரசியல்வாதிகள் தமது அரசியல் சுயஇலாபத்திற்காக தமிழர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் பிரித்து இனம் காட்டி கொச்சைப்படுத்துகின்றனர்.

இது அவர்களுடைய சுயநலமே தவிர உண்மை இல்லை என்றார்.

தொடர்ந்து வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான விவாதம் ஆரம்பமானது.

ஆனால், வடமேல் மாகாணத்தில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை என்பதுதான் வேடிக்கை. இந்த குறையை நீக்கினார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

புத்தளம் மாவட்டத்தில் ஐந்து தொகுதிகள் இருக்கின்றன. ஐந்து வைத்தியசாலைகளும் இயங்குகின்றன. ஆனால்,நோயாளர்களுக்காக அம்புலன்ஸ் வாகனங்கள் இல்லை. எனவே, அமைச்சர், இந்த வைத்தியசாலைகளுக்கு தலா ஓர் அம்புலன்ஸ் வண்டியைப் பெற்றுத்தரவேண்டும்

மேலும், புத்தளம் மாவட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்தியை ஊக்கப்படுத்துவதன் மூலம் பெருந்தொகையானோருக்கு தொழில் வாய்ப்புக்களையும், சுயவருமானத்தையும் பெறவும் முடியும் என்றும் அமைச்சர் அஸ்வர் நம்பிக்கை தெரிவித்தார்.


சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள் !

UMAZAKI Judo



அழகும் எழிலும் மிக்க தோற்றம்
எங்கும் எதையும் வெல்லும்
வல்லமை கொண்ட உண்மையான தோற்றம்
● பாதுகாப்பு. ● வசதி. ● சிக்கனம்.
125CC என்ஜின் பவர்

உமஸாக்கி ஜுடோ - சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள்

ஏக முகவர்கள்
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10 தொலைபேசி: 2324261-5, 2337283-5 ஃபக்ஸ்: 2446554
யசோ மோட்டர்ஸ் 163, ஸ்டென்லி வீதி யாழ்ப்பாணம்
நாடெங்கும் உள்ள வியாபாரிகளிடம் கிடைக்கின்றன.

Access Graphics



உங்களுடைய சொந்த மண்ணிலேயே Baraka உற்பத்திகளை கொள்வனவு செய்யும் அரிய வாய்ப்பு!

கொலஸ்ட்ரோல் ?
அவஸ்தைபடுகின்றீர்களா...?

பரகா கருஞ்சீரக எண்ணெயுடன் வெள்ளைப்பூடு குளிசைகள்

இயற்கையாகவே கொலஸ்ட்ரோலைக் கட்டுப்படுத்தி சீரான நிலைக்கு கொண்டு வரும் ஆற்றல் பெற்றது.

நம்பமுடியவில்லையா?

மேலும் மாரடைப்பு, இருதய நோய் மற்றும் Bypass சிகிச்சைகளிலிருந்து முற்றிலும் விடுதலை

Baraka உங்கள் ஆரோக்கிய வாழ்வின் நண்பன்



தற்பொழுது எங்கள் Baraka உற்பத்திப் பொருட்கள் யாழ் மண்ணில்...

* முதற்தர கடைகள் மற்றும் முதற்தர சூப்பர் மார்க்கட்டுகளிலும் கிடைக்கும்

இது ஒரு பரிபூரண மூலிகை நிவாரணி

Garlic BLACK SEED OIL CAPSULES

உற்பத்திசெய்து விநியோகிப்போர்: ______

EXPOLANKA PHARMACEUTICALS PVT LTD,.

Hotline: 2676398/9
No. 251, Deans Road, Colombo 10. Tel: 2676398-9 Fax: 2676456
Email: expopharma@expo.slt.lk Website: www.barakaoil.com

DigiPro

# IBMS

தற்போது யாழ். நகரின் மத்தியில் 4 புதிய பிரிவுகள் ஆரம்பம் 14.12.2003 Sunday 15.12.2003 Monday

Save your Money because Less Course Fee

**Dip. in Business Applications** (MS Office) — Free Study Pack
Duration - 4 Months Fee : 2500.00

**Dip. in Digital Science** (Information Technology)
Duration - 8 Months Fee : 4500.00

Easy to Teach
Easy to Touch
Don't Worry
**KIDS Programme**
O/L மாணவர்களுக்கானது Course Fees 1000/=

**Dip. in Desktop Publishing** — Free Study Pack
Duration - 5 Months Fee : 3500.00

**Higher Dip. in Software Engineering** (Full Language Course)
Duration - 12 Months Fee : 5500.00

**Certificates**

| | |
|---|---|
| MS Word | 1000.00 |
| MS Excel | 1000.00 |
| MS Access | 1000.00 |
| Page Maker | 1500.00 |
| Photo Shop | 1500.00 |
| Visual Basic | 2000.00 |
| Pascal | 1500.00 |
| Java | 3500.00 |
| C++ | 1500.00 |
| Hard Ware | 2000.00 |

**Dip. in Hardware**
Duration - 3 Months Fee : 3500.00

**Dip. in English** (by: S.Pathmanathan)
Duration - 5 Months Fee : 1500.00

**Institute of Business Management Studies**
Head Office : TP:-021-222-3165 250,Stanley Road, Jaffna.
Branches : N.M.V. Road, Nelliyady, Chankaththanai, Chavakachcheri.

கற்கைநெறிக் கட்டணம் எமது கிளைகளுக்கு பொருந்தாது.
எமது சாவகச்சேரி கிளையிலும் Dip. in Desktop Publishing கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

## விஞ்ஞானக் கல்லூரி

கந்தசாமி கோவில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

2004ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்

**இன்று 12.12.2003 மாலை 4.00மணிக்கு**

**ஆசிரியர் கிலன்**

*(பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்)*

- ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட புலமைப்பரிசில் வினாத் தாள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
- வாரந்தோறும் 2பரீட்சைகள், அச்சடித்த குறிப்புத்தாள் இலவசம்.
- எமது கல்வி நிலையத்தில் 5-11ஆம் ஆண்டுவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

-நிர்வாகி.

(C-31845)(32-12-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும், நிரோஜன் உணவக உரிமையாளருமாகிய **விக்டர் இம்மானுவல் (ஸ்ரீ)** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி ஜெகதீசன் சூசைஅம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*சிவன் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (25722)(32-12-11) -நண்பர்கள்.

## தேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை.
தொடர்பு:
**குமார் தையலகம்,**
முதலாம் கட்டை,
கொக்குவில்.
(25719)(32)

## ஆள் தேவை

தேநீர்ச் சாலை ஒன்றிற்கு ரீ மேக்கர், ரொட்டி மேக்கர், சப்ளேயர் உடன் தேவை.
நேரில் தொடர்புகொள்ளவும்.

**நித்தியானந்தன் தேநீர் அகம்**
இல.514, ஆஸ்பத்திரி முன்பாக
யாழ்ப்பாணம்.
(C-31850)(32-12-11)

## சமையல் ஆள் தேவை

14 ஆம் திகதி யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள ஹொட்டல் ஒன்றிற்கு சமையல் ஆள் மற்றும் ரீ மேக்கர், சப்ளேயர், உதவியாளர், பில்கிளாக் ஆகியோர் தேவை.
இன்று நேரில் வரவும்.

**செல்வம் ஸ்ரோஸ்**
இல,330. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-31848)(32-12-11)

## லஷ்சுமி சினிமா இணுவில்

இன்று முதல்
விஜய், ஜோதிகா மற்றும் விவேக் நடித்த
**குஷி** (ரீலீஸ்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.)
(C-31813)(32)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், ஜோதிகா,
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
**பிரியமான தோழி** (ரீலீஸ்)
தினசரி காட்சிகள் :
11.00 3.00 7.00 (பு.நே.)
(C31849)

## லிபேட்டி அச்சுவேலி

ஸ்ரீகாந், ஸ்னேகா (இருவேடம்), விவேக், மணிவண்ணன் நடித்த
**பார்த்திபன் கனவு** (ரீலீஸ்)



காட்சிநேரம்: , 3.00, 7.00. (தினசரி),
சனி, ஞாயிறு- 11.00, 3.00, 7.00
(C/31821)(32)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், மீராஜஸ்மின் நடித்த
**ஆஞ்சநேயா** (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு இரவு
**Get Carter**
இரவு 8.45 இற்கு (பு.நே)
(C-31816)(32)

## ராஜா யாழ்ப்பாணம்

தருண், திரிஷா,
விவேக், மணிவண்ணன் நடித்த
**எனக்கு 20 உனக்கு 18**
(ரீலீஸ்)
காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம்.





# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெகதீசன் சூசைஅம்மா

திருமதி ஜெகதீசன் சூசைஅம்மா நேற்று (11.12.2003) வியாழக்கிழமை கர்த்தருக்குள் கலந்துகொண்டார்

அன்னார் காலஞ்சென்ற ஜெகதீசன் அவர்களின் அன்பு மனைவியும் ஜோசப் (ஜெயம்,சீனிக்கடை), அன்ரனி (மணியம், தேநீர்க்கடை, சத்திரத்துச் சந்தி), மரியதாஸ் (செட்டி, மணியம் தேநீர்க்கடை,சத்திரத்துச் சந்தி), மரியற்றா (ராணி), சந்திராதேவி (சாந்தி), ஜோன் பீற்றர், கலா, இராகவன் (ஆட்டோ உரிமையாளர்), செல்வி, இம்மானுவல் (ஸ்ரீ, நிரோசன் உணவகம், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகராணி, விஜயலக்சுமி, நீலமேகம் (உரிமையாளர்,சண்முகம் உணவகம், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்), மதிவதனி, அலோசியஸ், உதயா, சிவராசா, இந்திரா, கணேசன் ஆகியோரின் மாமியும் மற்றும் பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*185/9,கில்னர் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (C/31849) (13-11-12-32)
தகவல்: **மக்கள்,மருமக்கள்**

## வைரவன் தர்மலிங்கம்

மாவிலங்காடு, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், மயிலணிவடக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் தர்மலிங்கம் நேற்று (11.12.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் குஞ்சுபிள்ளையின் அன்புக் கணவரும் மன்மதன் (லண்டன்), வடிவாம்பிகை (ஆசிரியை, ஜன்சக்தி முன்பள்ளி,மயிலணி), தனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராசாவின் (கட்டட ஒப்பந்தகாரர்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2003). வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.* (25724) (13-12-11-32)
தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

# மரண அறிவித்தல்கள்

## க.நவரத்தினவேல்

நெல்லண்டை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தாம்பரம் இந்தியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட க.நவரத்தினவேல் அவர்கள் 10.12.2003 அன்று இந்தியாவில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

*நெல்லண்டை,*
*பருத்தித்துறை.* (31854)(32-12-11)
தகவல்: மு.செ.கதிர்காமத்தம்பி (கிருஷ்ணா ரேடேர்ஸ் வவுனியா)

## முருகேசு பொன்னம்பலம்

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் புதுறோட் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பொன்னம்பலம் 10.12.2003 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - சம்பூரணம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக்கணவரும் அருள்ராசா, கிருஸ்ணராசா,சிவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2003) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீலகிரி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.* (25723)(32-12-11)
தகவல்: பொ.அருள்ராசா (மகன்), மு.சுப்பிரமணியம் (சகோதரன்)

## நாகலிங்கம் மகாலிங்கசிவம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முல்லை. புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் நாகலிங்கம் மகாலிங்கசிவம் அவர்கள் 09.12.2003 அன்று காலமானார்.

அன்னார் திரு.திருமதி நாகலிங்கம் நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி வள்ளியம்மை அவர்களின் அன்புக் கணவரும் திரு.திருமதி விஸ்வநாதர் சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் சகோதரனும் சந்திரகுமாரி (ஆசிரியை, மு/புது.ஸ்ரீ.சுப்பிரமணிய வித்தியாசாலை), சிவகுமாரன் (சுவிஸ்), சிவகுமாரி (சுவிஸ்), சூரியகுமாரி(ஆசிரியை, மு/புது.ஸ்ரீ. சுப்பிரமணிய வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானம் (புங்குடுதீவு), அமுதா (சுவிஸ்), சதானந்தன் (சுவிஸ்), விஜயகுமார் (மு/இரணைப்பாலை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமிதாப், ஆர்த்தி, நிரோஜன், நிதுஷா, பிருந்தாப், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் கணபதிப்பிள்ளை, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான மனோச்சர் குழந்தைவேலு, கனகரத்தினம், கனகம்மா, கமலாசினி, இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2003) சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நடைபெறும்.

*வள்ளிமனை,*
*2ஆம் வட்டாரம்,*
*புதுக்குடியிருப்பு.* (25718) (12-11-32)
தகவல்: **திருமதி ம.வள்ளியம்மை** (ஓய்வுபெற்ற ஆசிரியை)

## றொபேட் வில்லியம் (இராசேந்திரம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட றொபேட் வில்லியம் (இராசேந்திரம்) 09.12.2003 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் மர்த்தினாவின் (தங்கராணி) கணவரும் காலஞ்சென்ற சுவக்கின்பிள்ளை மரியமுத்துவின் மகனும், பேதுருப்பிள்ளை - திரேசம்மாவின் மருமகனும் சர்மிளா, றொயிலா, லக்ஸ்பலா, லாவண்யா, விநோத ஆகியோரின் தந்தையும் பொன்ராசா, செல்லம்மா, ரஞ்சி ஆகியோரின் சகோதரனும் வேதநாயகம், பிரான்சிஸ், குலம், சௌந்தரி, ரதி, நந்தினி, கிறிஸ்டினாபிள்ளை, காலஞ்சென்ற சாள்ஸ், அன்ரனிஸ் ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் பெனடிக்ற், பற்றிக்மகேஸ், ஸரனிஸ்லோஸ், இளங்கீரன் ஆகியோரின் மாமனாரும் லூசியா, அபிசன், அனுசியா, வர்சன், விதுசன், சுரேஸ்மேனன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.12.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 (பு.நே.) மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரி.கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின்பின் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61/3, மவுண்காமல் வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (25718) (12-11-32)
தகவல்: **பே.பிரான்சிஸ்** (மைத்துனர்)

## திருமதி செல்லத்துரை அன்னரட்ணம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அன்னரட்ணம் அவர்கள் 11.12.2003 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் கதிரித்தம்பி செல்லத்துரை (பிரதம சிறைச்சாலை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் செல்வரட்ணம் (ஸ்கொட்டின் லீடர், றோயல் விமானப் படை, லண்டன்), செல்வமலர் (டாக்டர், அவுஸ்திரேலியா), K.S.துரைரட்ணம் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்), விவேகானந்தன் (சேவாலங்கா, வவுனியா), ஸ்ரீகாந்தன் (புகையிரத நிலைய அதிகாரி, அவுஸ்திரேலியா), இன்பமலர்(அவுஸ்திரேலியா), நித்தியானந்தன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), நிர்மலகாந்தன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மராணி (லண்டன்), DR.சதானந்தன (டாக்டர், அவுஸ்திரேலியா), சுகுணாதேவி (அவுஸ்திரேலியா), சிவராஜா (பொறியியலாளர்,அவுஸ்திரேலியா), கௌரி (அவுஸ்திரேலியா), கோபிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காயத்திரி (கணக்காளர், லண்டன்), ரவிசங்கர் (பொறியியல்பீடம், அவுஸ்திரேலியா), தர்ஷன் (மாணவன், அவுஸ்திரேலியா), பிரதீபா (சேவாலங்கா, வவுனியா), ஹம்சானந்தி (விவசாயப் பாடசாலை, வவுனியா), வைஷ்ணவி (அவுஸ்திரேலியா), கௌசிகி (அவுஸ்திரேலியா), யானகி (அவுஸ்திரேலியா), சுஜித் (அவுஸ்திரேலியா), சுவேதா (அவுஸ்திரேலியா), நிஷானி (அவுஸ்திரேலியா), நிவாஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, கனகம்மா, தங்கம்மா, கனகசபாபதி, அருணாசலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்பு அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மலரகம்,*
*கருவேலடி லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (25721) (12-11-32)
தகவல்: **K.S.துரைரட்ணம்** (சாந்தண்ணா - மகன்), இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாணம்.

# ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு கொழும்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.12

தேசிய சமாதானப் பேரவையும் வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர்களுக் கான ஒரு நாள் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடியும் சமாதானச் செயற்பாட்டைப் பாதுகாப்பதில் ஊடகங்களின் பங்கும் என்ற தொனிப் பொருளில் இக்கருத்தரங்கு நடைபெறுகிறது.

முதல் அமர்வு காலை 9.30 மணி முதல் 11 மணி வரையும் நடைபெறும். இந்த அமர்வில் ஊடகங்கள் இனப் பக்கச்சார்புடன் அறிக்கையிடுகின்றனவா? என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம், தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா, சுதந்திர ஊடகவியலாளர் இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

இரண்டாவது அமர்வு காலை 11 மணி முதல் 12.30 மணிவரை நடைபெறும்.

இதில் தற்போதைய அரசியல் நெருக் கடியும் ஊடகங்களின் பங்கும் என்ற தலைப்பில் சகவாழ்விற்கான மன்றத்தைச் சேர்ந்த கலாநிதி குமார் ரூபசிங்க, மாற்றுக் கொள்கைகளுக் கான நிலையத்தைச் சேர்ந்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, 'பீரல்' அமைப்பைச் சேர்ந்த கிங்ஸ்லி ரொட்றிகோ ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

மூன்றாவது அமர்வு பிற்பகல் 1.15 மணிமுதல் 2.45 மணிவரை 'ஊடக நிறுவனங்களைப் பலப்படுத்துதல்' என்ற தலைப்பில் நடைபெறும்.

இதில் 'லங்காதீப' பத்திரிகையைச் சேர்ந்த ஆரியநந்த தொம்பஹ வத்த, கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஜயதேவ உயன்கொட, தினக்குரல் ஆசிரியர் ஏ.சிவநேசச் செல்வன் ஊடகப்புகார் ஆணைக் குழுவைச் சேர்ந்த திருமதி மனிக் மெண்டிஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவார்கள்.

(ஒ-7)

## நேற்றைய ஹர்த்தாலால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களான யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும், தனியார் பஸ் ஊழியர் சங்கமும் கூட்டாக அறிவித்துள்ளன.

நேற்றுக் காலை முதல் தனியார் பஸ்கள், முச்சக்கரவண்டிகள் உட்பட தனியார் போக்குவரத்து வாகனங்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒரு சில பஸ்கள் மட்டும் சேவையில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. தரைப் பாதையூடாக கொழும்பு சென்ற சில வாகனங்களும் மிகக் குறைந்தளவு பயணிகளுடனேயே சென்றன.

யாழ்.செயலகம் உட்பட அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் மிகக் குறைந்தளவு ஊழியர்களே கடமைக்கு வந்திருந்தனர். இதனால் வழமையான பணிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவுகளைத் தவிர ஏனைய பிரிவுகள் எவையும் இயங்கவில்லை. வெளிநோயாளர் பிரிவுக்கும் குறைந்தளவு நோயாளர்களே வருகை தந்திருந்தனர்.

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போதும் நேற்று நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படவில்லையென கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்று குடாநாட்டின் பிரதான வீதிகளில் பெருமளவு பொலீஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

இதேவேளை, நேற்றைய ஹர்த்தால் தொடர்பாக, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில்:-

உணர்வாலும், உறுதியாலும் ஒன்றுபட்ட மக்களை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது - பிரித்துவிட முடியாது என்பதற்கு முன்னுதாரணமாக நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் அமைந்துள்ளது.

இன்றைய தேவையை கருத்திற்கொண்டு உணர்வு பூர்வமான உள்ளக் குமுறல்களை இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் சுடச்சுட வெளிக்காட்டிய அரசதிணைக்களங்கள், கூட்டுறவு, தனியார்துறை, கல்விக்கூடங்கள் ஏனைய பொது நிறுவனங்கள் ஆகியோருக்கும் -

சிறப்பாக இதனை கடைப்பிடித்த பொதுமக்களுக்கும் எமது ஒன்றியம் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று உள்ளது.

(எ-3-5-6-7-8-11-15-49-51-70-76-86-117-139-152-173)

## மருத்துவ மாணவர் வகுப்பு பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதலாக தமது வகுப்புக்களை முற்றாக பகிஷ்கரித்து வருகின்றனர்.

தமது கல்விச் செயற்பாடுகளை இடையூறின்றித் தொடர்வதற்கு வைத்திய நிபுணர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரியே அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வரவுநிலைப் பேராசிரியராக வைத்திய கலாநிதி வி.குணானந்தன் கடந்த மாத இறுதிப் பகுதியிலிருந்து மீண்டும் பதவியேற்றுள்ளார்.

இவரது நியமனத்தை யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் ஆட்சேபித்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன், இறுதி வருட மாணவர்களுக்கான சத்திர சிகிச்சை வகுப்புக்களையும் கடந்த மூன்று வார காலமாக அவர்கள் இடைநிறுத்தியிருந்தனர்.

சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்களின் இந்நடவடிக்கையால் இறுதியாண்டு மருத்துவ மாணவர்களில் ஒரு பகுதியினரின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சக மாணவர் அணிகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும், அவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீராக முன்னெடுக்கப்படும் வரை தாமும் தமது கல்வி நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் முதல் பகிஷ்கரிப்பதாக இறுதியாண்டு மாணவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

(எ-9)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் மருத்துவ பீடத்துக்கு 879 பேரும் பொறியியல் பீடத்துக்கு 961 பேரும் முகாமைத்துவ பீடத்துக்கு இரண்டாயிரத்து 131 பேரும், சட்ட பீடத்துக்கு 199 பேரும் விவசாய பீடத்துக்கு 740 பேரும், கலைப்பீடத்துக்கு மூவாயிரத்து 256 பேரும் தெரிவாகியுள்ளனர். (எ-4)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கென கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, இந்து கலாசார அமைச்சர் தியகேஸ்வரன், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய உடனடி புனர்வாழ்வுப் பணிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு குடாநாட்டில் எந்த வித திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவில்லை என்று அமைச்சர் மகேஸ்வரன் பிரதமரிடம் தெரிவித்தார் என அறியவந்தது.

அந்த அமைச்சுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களை அவர் சுமத்தினார் என்றும் - கூறப்பட்டது.

இதையடுத்து, உடனடித் தேவைகளை இனங்காணவும், அதற்கான பரிந்துரைகளை வழங்கவும் இரு அமைச்சுக்களின் செயலாளர்கள் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. (எ-3)

## ஈ.க.தொகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான பேச்சுக்கள், ஜே.வி.பியுடன் கூட்டு முன்னணி அமைக்க மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் தொகுதி அமைப்பாளர்களுக்கு விளக்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கும் மூன்று அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்துக்கு எடுக்கப்படும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிகிறது.

## ஏனோ தானோ போக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகளை நடத்துகின்றார். ஆனால், ஜனாதிபதியின் தரப்பில் இருந்து எந்த ஒரு நல்ல சமிக்ஞையும் இது வரை வெளிப்படவில்லை எனவும் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

"நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியுடன் இரண்டு மணிநேரம் பேச்சு நடத்தினார்.

புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரதமரே சகல பொறுப்புகளையும் ஏற்று கையெழுத்திட்டுள்ளார். ஆனால் இப்பொழுது இந்தப் பொறுப்புகள் கேள்விக்குறியாகிவிட்டன.

பாதுகாப்பு அமைச்சுக்குத் துணை புரியும் அமைச்சையோ அல்லது சமாதானப் பேச்சின்போது நோர்வே அனுசரணையாளர்களுடனும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருடனும் தொடர்புகளைக் கொண்டிருக்கும் தேசியப் பாதுகாப்பு அமைச்சையோ ஏற்க அரசு தயாராக இல்லை என்று பிரதமர் ஜனாதிபதியிடம் நேரடியாகவே கூறிவிட்டார்.

சமாதானப் பேச்சுகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதானால் முழுப் பாதுகாப்பும், பேச்சின் போது ஏற்படும் இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதற்கான அதிகாரமும், உத்தரவாதமும் தன்னிடம் ஒப்படைக்கப்படாவிட்டால் சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்லத் தயாரில்லை என்றும் பிரதமர் கூறிவிட்டார்.

நேற்றுமுன்தினம் இரண்டு மணி நேரம் பேச்சு நடைபெற்ற போதும், ஜனாதிபதி பிரதமரின் கோரிக்கைகளுக்கு நேரடியாக பதில் அளிக்கவில்லை.

மாறாக சமாதானப் பேச்சு ஆரம்பிக்கும் போது எதைப் பேசுவது, எப்படிப் பேசுவது, எதை முன்வைப்பது என்பதிலேயே அக்கறை உடையவராகத்தன்னை ஜனாதிபதி காட்டிக் கொண்டாரே தவிர, புலிகளுடன் பேச்சை யார் ஆரம்பிப்பது, யாரிடம் பொறுப்புகளை ஒப்படைப்பது என்பது தொடர்பாக ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. இது ஜனாதிபதியின் ஏனோ தானோ போக்கையே காட்டுகின்றது. எனவே, ஜனாதிபதியுடனான நேரடிப் பேச்சுகள் படுதோல்வி என்பதே எமது கருத்து."

- இவ்வாறு அவர் கூறினார்.

டிசெம்பர் 15ஆம் திகதிக்குள் ஏதாவது ஒரு முடிவு ஏற்படவேண்டும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஜனாதிபதி எந்த முடிவையும் கூறாவிட்டால் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? தேர்தல் ஒன்றை நடத்தக் கோருவீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

எதையும் சந்திக்க அரசாங்கம் தயார், ஆனால், 15ஆம் திகதிக்கு முன் எதையும் அவசரப்பட்டு வெளியிட வேண்டிய அவசியம் இல்லை. தேர்தல் ஒன்றை நடத்த எட்டுகோடி ரூபாதேவை. ஆனால், நாட்டின் இன்றைய பொருளாதார நிலை அதற்கு இடம்கொடுக்காது. அரசியல் விமர்சகர்களும், புத்திஜீவிகளும், முதலீட்டாளர்களும், நாட்டு மக்களும் தேர்தல் ஒன்றை விரும்பவில்லை என்று அமைச்சர் பீரிஸ் அக்கேள்விக்குப் பதிலளித்தார்.

"தேசிய அரசு அமைக்க அரசு இணங்காவிட்டால் அமைச்சர்கள் இன்றி அரசை நடத்திச் செல்வேன்" என்று ஜனாதிபதி கூறினார் என்று ஒரு சிங்களத் தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. அதுகுறித்து உங்களுடைய நிலை என்ன? என்று மற்றொரு கேள்வி எழுப்பப்பட்டது.

"அது ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருக்கலாம். நாம் எதையும் சொல்ல முடியாது. மூன்று அமைச்சுக்களை மட்டுமல்ல நாடாளுமன்றத்தின் சில உறுப்பினர்களை தம்பக்கம் எடுத்து முழு நாடாளுமன்ற அதிகாரத்தையுமே கைப்பற்றுவது தான் ஜனாதிபதியின் திட்டம். ஆனால், அது கைகூடவில்லை. அதனால்தான் இன்று பிரதமருடன் பேச்சுக்கு வந்துள்ளார். இல்லையேல் அதற்கான சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது" - என்று அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

புலிகளுடனான பேச்சுக்கு யார் பொறுப்பு என்ற கேள்விக்குச் சரியான பதில் கிடைக்கும் வரை சமாதானப் பேச்சு தொடங்காது என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

## மண ாசகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்று நடத்தப்படும்.

சிஹல உறுமய கட்சியின் தலைவரான திலக் கருணாரத்ன பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கையேற்றுள்ள போதிலும் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக நல்ல மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று குற்றஞ் சாட்டியிருக்கும் அவர், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

(ஏ)

## மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது.

மனுதாரா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தமது நியாயங்களை எடுத்துக் கூறினர்.

அதையடுத்து இந்த மனு தொடர்பாக தமது நியாயங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்பும்படி நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.


**நேர்முகத்தேர்வு**

நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களின் பணிநிலை வேண்டுகைகளுக்கான நேர்முகத்தேர்வு

**11.12.2003 வியாழக்கிழமை நடைபெற்ற நேர்முகத் தேர்விற்கு சமூகம் தராதோர் இன்று (12.12.2003) நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்**

நேர்முகத்தேர்வு இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம். (கைலாயபிள்ளையார் கோவில் அருகாமை)

காலம்: 12.12.2003 வெள்ளி காலை 10மணி

நிதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்

**வடக்கில் சூரியன் உதயமாகுமா?**

**ஆம் → 03.01.2004 இல்**

(25548)(31)

**CHARTERED ACCOUNTANCY FOUNDATION & INTERMEDIATE JULY 2004**

aat - stage I&II - June 2004

CIMA (UK) Foundation - May 2004

ஆகிய தொழில்சார் கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

உங்கள் தொடர்புகளுக்கு:

IPAS

199, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பிறிமியர் பேக்கரி மேல்மாடி)

அலுவலக நேரம்: Sat. - Sun. 8.00 - 3.00 மணி

Tel: 0777 563292 / 563294. (318320)(31-11-12)

**நாளிரும் மலிவு விற்பனை**

நத்தார் - புதுவருட வாழ்த்து மடல்களை மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்:- யாழ்.புனித மரியன்னை பேராலயம்.

(ஆயர் இல்லம் அருகில்)

(25676)(31-11-12)

**அரசாங்க கணக்காளர் சேவை தரம் II இற்கான போட்டிப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்புகள்**

பரீட்சைக்கான வினாத்தாள்கள் அனைத்தினையும் உள்ளடக்கிய தயார்ப்படுத்தல் வகுப்புகள் அரச சேவையில் உள்ள கணக்காளர்களாலும் பட்டயக்கணக்கறிஞராலும் நடத்தப்பட உள்ளன.

13.12.2003 காலை 9.00 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

உடன் பதிவுகளை மேற்கொள்ள:

IPAS 199, MAIN STREET, JAFFNA (பிறிமியர் பேக்கரி மேல்மாடி)

அலுவலக நேரம்: Sat. & Sun. 8.00 - 3.00

Tel: 0777 563292, 563294

(கடந்தகால வினாத்தாள்கள் அனைத்தும் உள்ளடக்கிய Hand Outs வழங்கப்படும்) (C-31832)



அநேகரின் வேண்டுகோளுக்கமைய வெளிவந்துவிட்டது

**ஆசிரியர் போட்டிப்பரீட்சை வழிகாட்டி நூல்**

பொது அறிவு — உளச்சார்பு

ஆக்கியோன்: பீ.உமாசங்கர் B.Com., Spl.Trd.Com.

வெளியீடு: நல்லூர் சயன்ஸ் அக்கடமி

பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, துர்க்கா (சுன்னாகம்), சிதம்பரப்பிள்ளை (நெல்லியடி), நல்லூர் சயன்ஸ் அக்கடமி.

FREE HAND OUT

இப்போட்டிப்பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் சனி, ஞாயிறு 1.00 p.m

கடந்தகால எதிர்பார்க்கை வினாவிடைகளும் அண்மைக்கால பொது அறிவு விடயங்களும் உள்ளடங்கியது

(சி31831)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.